Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 79 | ஜனவரி 2017 | விலை ரூபா :- 10.00



## இழப்புகளின் பெறுமதி

### 30 இலட்சம் கோடி ரூபா

இந்தியாவின் மூத்த இராஜதந்திரியான சிவ சங்கர் மேனன் அண்மையில் வெளியிட்ட அவரது நூலில் "Choices: Inside the Making of Indias Foreign Policy" இலங்கையின் வடக்கு-கிழக்கை மையமாகக் கொண்டு இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் அழிவுகளால் ஏற்பட்ட நட்டங்களை பணப்பெறுமதியில் கணிப்பிட்டால் அது 20000 கோடி (அமெரிக்க) டாலர்களுக்கும் (அதாவது சுமார் 30 இலட்சம் கோடி ரூபாக் களுக்கு) மேலாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிவசங்கர் மேனன் இந்திய வெளிநாட்டு விவகாரங்களுக்கான செயலாளராகவும், இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்தவர். மேலும் அவற்றுக்கு முன்னர் இலங்கை, பாகிஸ்த் தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இந்திய தூதுவராகவும் கடமையாற்றியவர். அந்த வகைகளில் அவர் தென்னாசிய நாடுகளுக் கிடையிலான முரண்பாடுகள் மற்றும் உறவுகள் தொடர்பாகவும், இந்தியா-சீனா-இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் இராணுவ உறவுகள் தொடர்பாகவும் விரிவான தகவல்கள் அறி வும் ஆழமான அனுபவமும் உடையவர்.

அவர் தனது நூலில் வெளியிட்டுள்ள தகவல் களின்படி, 1983க்கும் 2009க்கும் இடைப் பட்ட காலகட்டத்தில் இலங்கையில் வடக்கு-கிழக்கை மையமாகக் கொண்டு நடந்த உள் நாட்டு யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 80000 தொடக்கம் 100000 வரையிலாகும் என்கிறார். அதில் 30000 தொடக்கம் 50000 வரையிலானோர் பொது மக்கள் எனவும் 27693 பேர் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும், மேலும் 23790 பேர் அரச படைகளைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறுகிறார்.

புலிகளோடு நடத்திய யுத்தத்தில் 1155 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதை குறிப்பிடும் சிவசங்கர் மேனன், புலிகளால் கொல்லப்பட்ட ஏனைய தமிழ்க் கட்சிகள் மற்றும் இயக்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களினுடைய எண்ணிக் கையை தனது கணக்கில் எடுத்துக் கொள்ள வில்லையென்றே தெரிகிறது.

# இந்த புத்தாண்டில்


## உறுதியாக ஒரு தீர்மானம் செய்வோம்

உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படுவது, மக்கள் சொந்த ஊர்களில் மீளக்குடியேறுவது, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவது, அரசு மீது அச்சமற்றவர்களாக மக்கள் வாழ்வது - இவை சாத்தியமாக்கப்பட வேண்டும்.

பொருளாதார வளங்கள் பொதுமக்களின் உடமைகள் விவசாயம், மீன்பிடி மற்றும் வாழ்வாதார தொழிற் துறைகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

யுத்தத்தாலும் வர்த்தக மயமாக்கத்தாலும் பலவீனமாகிவிட்ட கல்வி, சுகாதாரம், பொதுப் போக்குவரத்து துறைகள் யாவும் மக்கள் மயப்பட்டவைகளாக பலப்படுத்தப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களினதும் உரிமைகள் உறுதிசெய்யப்பட வேண்டும் அவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.



அதிகரித்துவரும் குரூர வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதுடன், பெண்களுக்கெதிரான அத்துமீறல்கள், போதைவஸ்து பாவனைகள் போன்றவற்றிற்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

வறுமை ஒழிப்பு, ஜனநாயக விரிவாக்கம், சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு-சமத்துவம், சூழல் பாதுகாப்பு என்பன சாதிக்கப்பட வேண்டும்.

நீர் உட்பட பொதுச் சொத்துக்களான நாட்டின் வளங்கள் ஏக போக முதலாளித்துவ நிறுவனங்களால், தனிநபர்களால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

விவசாயிகள், தொழிலாளர்கள் நவீன சமூக வாழ்வியல் தேவைகளை பெறுபவர்களாக ஆக வேண்டும். ஆழமாகிவிட்ட நவ தாராளவாத பொருளாதார கட்டமைப்பு நாட்டு மக்களின் அடிப்படை மற்றும் மனித உரிமைகளை பறித்துவிடாது பாதுகாக்க வேண்டும்.

## மக்கள் நலனில் அக்கறை கொண்டோரே!

★ சமூக மேம்பாட்டில் நேரடி ஈடுபாடு காட்டுவோம்.

★ சமூகத்தை முன்னேற்றுவதாக வாக்குறுதிகள் தந்து பதவிகளைப் பெற்றவர்களின் நடவடிக்கைகள் குறித்து சிந்திப்போம் - விவாதிப்போம் - கேள்வி எழுப்புவோம்.

★ சமூக முன்னேற்றத்திற்காக தம்மை அர்ப்பணித்து உழைப்போருக்கு உறுதுணையாய் கைகொடுப்போம்

எங்கள் சமூக மேம்பாட்டிற்காகப் பங்களிக்கும் எமது கடமையிலிருந்து தவறிவிடாமல் இருக்க மேற் கூறிய மூன்றில் ஒன்றையாயினும் இந்த ஆண்டில் செய்வோம் என உறுதி கொள்வோம்.

# தோல்வி உணர்வுகளுடன் முடியும் 2016 அரசியல் பரபரப்புடன் தொடங்கும் 2017

தமிழ்த்தேசவாதிகளினுடைய ஆறு முக அரசியற் கோரிக்கைகளாக உள்ள:

(1) "வடக்கு-கிழக்கு இணைப்பு",
(2) "சமஷ்டி அரசியற் தீர்வு",
(3) "தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்தல்",
(4) "முள்ளிவாய்க்கால் முடிவு மீதான சர்வதேச விசாரணை",
(5) "வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றல்",
(6) "யுத்தகாலத்தில் காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்தல்"

என்பன தொடர்பாக "நல்லாட்சி அர சாங்கம்" எதுவுமே மேற்கொள்ளா மையும், அவற்றில் எதுவும் சாத்திய மாகுவதற்கான எந்த இடைவெளியை யும் 2016 விட்டு வைக்காமல் கடந்து செல்கின்றமையும் தமிழ் பத்திரிகைகள் மற்றும் மேடை அரசியல் வட்டாரங்கள் மத்தியில் ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத் தியுள்ளது போல் தோற்றங்கள் காணப் படுகின்றன.

**இணக்க அரசியல் ஒத்திவைப்பு**

"நல்லாட்சி" அரசாங்கத்துடன் "பின் கதவு இணக்க அரசியல்" வியாபாரத்

( தொடர்ச்சி 4 ம் பக்கம் )

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி [S.D.P.T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM



294 A, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022

## பலவீனமான சமூகப் பாதுகாப்பு

எமது நாட்டில் பெருவாரியானவர்கள் விவசாயிகள் ஆனால், இம்முறை இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம வரண்டுவிட்டது. விவசாயிகள் கடன் சுமை அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதில் சவால்களை எதிர்நோக்கி நிற்கிறார்கள் இது இன்றைய பெருவாரியான மக்களின் நிலை என்றும் சொல்லலாம்.

அரிசியை இறக்குமதி செய்து சமாளித்தாலும் நாடு அவசர நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதென்றே சொல்ல வேண்டும்.

சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமாக உள்ள நாடாகவே இலங்கை இன்றளவில் இருந்துகொண்டிருக்கிறது. பட்டினி போசாக்கின்மை நோய் மரணம் தொடர்பான தீவிர கரிசனை தேவைப்படுகிறது. இயற்கையுடன் மனிதர்கள் நடத்திய விளையாட்டின் விபரீதம் உலக அளவில் மாத்திரமல்ல இலங்கையையும் பீடித்திருக்கிறது.

தமிழகததில் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

உணவு பாதுகாப்பு, நீர் நிலைகளைப் பேணுவது நெருக்கடிகள் சவால்களை எதிர்கொன்வதற்கான ஏற்பாடுகள் அவசியம்.

விவசாயம், அனர்த்த முகாமைத்துவம் என அமைச்சுக்கள் இருந்தாலும் இந்த நெருக்கடிகள் தொடர்பான பிரக்ஞை எவ்வாறிருக்கிறது. சிறந்த ஆட்சி என்பது உணவு, இருப்பிடம், கல்வி, சுகாதாரம் என்பவற்றை சாதாரண மக்களுக்கு மிகக் குறைந்த செலவில் வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஆனால் எமது அரசியல் தலைவர்களுக்கு அதிகார வர்க்கத்திற்கு

- நீர்நிலைகளை பாதுகாப்பது விருத்தி செய்வது பற்றி
- கிடைக்கும் நன்நீர் வளங்கள் மாசடையாமல் பாதுகாப்பது பற்றி
- விவசாய நிலங்களை முழு அளவில் பயன்பாட்டுக்கு கொண்டு வருவது பற்றி
- நிலங்களை அபிவிருத்தி செய்வது பற்றி
- சுற்றாடல் மாசடைவதிலிருந்து மீட்பது பற்றி
- விவசாயிகளின் குடும்பங்களின் வாழ்க்கை நிலை அவர்களின் சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவது பற்றி
- விவசாயிகளை தரகர் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது சந்தை நிலைமைகளை கண்ணியமாக வைத்திருப்பது பற்றி
- கூட்டுறவு துறை சீர்திருத்தங்கள் பற்றி
- விவசாயிகளுக்கான நட்டஈடு, காப்புறுதி பற்றி

எவ்வளவு தூரம் கரிசனை இருக்கிறது.

தாறுமாறான காலநிலை நிலமைகளில் நிரந்தர பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன இருக்கின்றன.

கண்ணுக்கு முன்னே நெற்செய்கை விவசாயிகளின் பயிர்கள் காய்ந்து கருகிவிட்டன.

தமக்கு நிவாரணங்களை விவசாயிகள் கோருகிறார்கள். புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எவ்வளவு தூரம் சரியான முறையில் தகுந்த நிவாரணம் வழங்கப்படும் என்பது முக்கியமான கேள்வியாகும்.

தெளிவான தொலைதூர திட்டமிடல் இல்லாததால் மழை இல்லாவிட்டால் விவசாயிகளின் நிலை அம்போதான் என்ற நிலையே காணப்படுகிறது.

கடுமையான மின் தட்டுப்பாடு உணவு நெருகடி நோய்கள் என சவால்கள் சூழ்ந்து வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

நவதாராளவாத உலகத்தின் பிரச்சினை இதுதான் இந்த விவசாயிகளின் பிரச்சினைகளை இந்த உலகம் கண்டுகொள்ளவில்லை.

முழுச்சமூகத்தையுமே ஆட்டம் காணச்செய்யும் இந்த அபாயத்திலிருந்து விவசாயிகளையும் பொதுமக்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரத்துடனும் பிரக்ஞையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும். எமது தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைவர்களுக்கு இந்தப் பிர்சினைகள் சுவாரசியமற்றவை.

நீண்டகால அடிப்படையில் இத்தகைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நிரந்தரமான திட்டங்கள் தேவை தண்ணீர் நிலைகளை விருத்தி செய்வது நீர் சேமிப்பு இவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்ட வேண்டும்.

பாரிய திட்டங்களுக்கு அப்பால் ஒவ்வொரு மனிதனும் நீர் சேமிப்பு நீர்பாதுகாப்பு திட்டங்களில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் பொறிமுறைகள் வேண்டும். மாற்று சக்தி (சூரிய சக்தி) வளங்களை ஒழுங்கு படுத்துவது ஒருங்கிணைப்பது இவை பற்றி ஒவ்வொரு மனிதனுக்குமான பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
## Social Democratic Party of Tamils (S.D.P.T)

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 2 ஆம் பாகம் )

### 5. கட்டாய மும்மொழிக் கல்வி

இந்த நாட்டின் தேசிய சமூகங்களுக்கிடையேயான உறவுகளில் நிலவும் பிளவடைந்த நிலைமையை மாற்றுவதற்கு இனங்களுக் கிடையிலான புரிந்துணர்வுகள் அவசியமாகும். அதற்கு ஒருவரது தாய் மொழியை மற்றவர் அறிந்திருப்பது அவசியமாகும். இன்றைய அறிவியல் உலகில் ஆங்கில மொழி அறிவும் கட்டாயமானதொரு தேவையாக உள்ளது. எனவே இந்த மூன்று மொழிகளும் இந்நாட்டின் கல்வித் திட்டத்தில் கட்டாய பாட மொழிகளாக ஆக்கப்படுதல் வேண்டும். இந்த மூன்று மொழிகளிலும் அடிப்படையான சித்தி பெறாதவர்களுக்கு எந்தவொரு அரசாங்க உத்தியோகமும் நாட்டின் எந்தப் பாகத்திலும் வழங்கப்பட மாட்டாது எனும் நிலை உருவாக்கப்பட வேண்டும், மேலும், அரசாங்க உத்தியோகத்தர்கள் தாங்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள இடங்களில் வாழும் சமூக மக்களின் மொழியில் சரளமாகவும் சுமுகமாகவும் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாக இருக்கும் வகையாகவே அரசாங்கம் அந்தந்த இடங்களில், அந்தந்த சேவைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல் வேண்டும். இந்த நிலைமைகளை இலங்கையின் மத்திய மற்றும் மாகாண ஆட்சியாளர்கள் உறுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

### 6. கட்சிகளுக்குள்ளே ஜனநாயகம்

இந்த நாட்டில் அரசியற் கட்சிகள் பெரும்பாலும் தனி மனிதர்களின் தனிப்பட்ட உடைமைகளாக அல்லது வாரிசு உரிமைகளாகவோ தான் காணப்படுகின்றன. உட்கட்சி ஜனநாயகம் என்பது இங்குள்ள அரசியல் கட்சிகளில் மிகவும் அரிதாகவே உள்ளது. இலங்கையின் தேர்தல் சட்டமோ அல்லது தேர்தல் ஆணையகமோ அரசியற் கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகம் பற்றிய விடயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. கட்சி களுக்குள் விமர்சனங்களுக்கும், விவாதங்களுக்கும் இடமளிக் கப்பட்டிருக்க வேண்டியதன் அவசியம் பற்றிய புரிதல் பொது மக்கள் மத்தியில் மட்டுமல்ல சமூக அரசியல் ரீதியாக ஈடுபாடு கொண்டவர்களிடையேயும் போதிய அளவு காணப்படவில்லை. இங்கு ஆட்சி அதிகாரம் என்பது ஒரு குறிப்பிட்ட சிறு குழுவினரின் சர்வாதிகாரமாகவேதான் இருக்கிறது. நாட்டில் ஆட்சி மாற்றம் அந்த குழுவினருக்கிடையேதான் நடைபெறுகின்றது. அதேபோல் மக்கள் பிரதிநிதித்துவம் என்பது ஒரு சிலரின் வாழ்நாள் உரிமை போல ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளால் இங்கு பொது மக்கள் வெறுமனே தேர்தல்களில் வாக்களிக்கும் இயந்திரங்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நடைமுறையில் உள்ள அரைகுறையான ஜனநாயகத்துக்குப் பதிலாக உண்மை யான மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு இங்கு ஒரு நடைமுறை மாற்றம் அவசியமாக உள்ளது. அதற்குரிய வகையாக இங்கு அரசியற் கட்சிகள் சட்டமும், தேர்தற் சட்டமும் ஆக்கப்பட்டு அவற்றை தேர்தல் ஆணையகம் முழுமையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

### 7. அனைத்து அமைப்புகளிலும் ஊழலற்ற ஆட்சி வேண்டும்

அரசியற் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஊழல், மோசடிகள் அற்றவர்களாக, மக்கள் சேவகர்களாக செயற்பட வேண்டும், தம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நேர்மையாகவும், நிதி மற்றும் அதிகாரங்களைப் பிரயோகித்தலில் வெளிப்படையானவர்களாகவும் இருக்க வேண்டும். அரச நிர்வாக அமைப்புகள் மக்கள் நேயம் கொண்டவையாக செயற்பட வேண்டும். மக்களுக்கு என்னென்ன சேவைகளை ஆற்றுவதற்கென அவை ஆக்கப்பட்டனவோ அந்த சேவைகளை இன, மத, சாதி, பிரதேச, வர்க்க வேறுபாடற்ற வகையில் பொது மக்களுக்கு நேர்மையாக ஆற்ற வேண்டும். தேர்தல்களின் போது மக்களை இன மற்றும் மத ரீதியாக உணர்ச்சி வசப்படுத்தியும் பொய் வாக்குறுதிகளை அள்ளி வழங்கியும் பதவிகளைப் பெறுபவர்கள் பின்னர் இங்கு ஊழல்களையும் மோசடிகளையும் செய்வதற்கு உரிமை பெற்றவர்கள் போல செயற்படுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதற்கு தமக்கு அதிகாரம் இல்லை என்றும் போதிய நிதியில்லை என்றும் கூறுபவர்கள் கோடிக் கணக்கில் பொதுமக்களின் பணங்களை ஊழல் செய்வதில் மட்டும் நிபுணர்களாக உள்ளனர். அதிகார துஷ்பிரயோகம் செய்வது ஒரு சமூக விரோதச் செயல். எனினும், இதுபற்றி இங்கு மக்கள் மத்தியில் முணுமுணுப்புகள் காணப்படுகின்றனவே தவிர அதற்கெதிராக மக்களின் திரட்சியோ, போராட்டங்களோ காணப்படவில்லை. இந்த ஊழல் மோசடிச் சக்திகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறானவர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.



### ஜனவரி 18 தோழர் ஜீவா நினைவு தினம்

ஒருமுறை வெளியூரிலிருந்து சென்னைக்கு ரயிலில் வந்திறங்கிய ஜீவா பஸ்ஸில் பயணிக்கக் காசில்லாமல் கட்சி அலுவலகத்துக்கு நடந்தே சென்று கொண்டிருந்தார்.

எதிரே வந்த தோழர் கேட்டார் : "என்ன ஜீவா. பையில்தான் மாவட்டத்தில் வசூலித்துக் கொண்டு வந்த பணம் இருக்கிறதே? பஸ்ஸில் போக்க கூடாதா? இந்த சுட்டெரிக்கிற வெய்யிலில் நடக்க வேண்டுமா?"

ஜீவா சொன்னார் : "தோழரே ... அது கட்சி நிதிக்கு மக்கள் அளித்த பணம். எனக்கு பயணப்படியாக கொடுத்த பணத்தை நான் செலவழித்துவிட்டேன். கட்சிக்கு கொடுத்த பணத்தை ஒப்படைக்காமல் அதை நான் பயன்படுத்துவது சரிதானா சொல்லுங்கள்?

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் ,
ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

தொடர்புகளுக்கு :-

இல: 294 A, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் பொய்க்கிறது! வயற்காடு வறள்கிறது! வறிய விவசாயிகளின் வாழ்வுக்கு வழியேது?

இந்த ஆண்டு எதிர்பாக்கப்பட்ட பருவமழை பொய்த்து விட்டதால் இலங்கை முழுவதும் ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யப்பட்ட நெற்செய்கைபாதிக் கப்படும் என அரச நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன. இது இந்தப் போகத்தில் நெல் விளைவிக்கப்படும் மொத்த நிலத்தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலானவையாகும். இதே வேளை வடமாகாணத்தில் நெற்செய்கை பண்ணப்பட்டிருக்கும் 21000 க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படும் என ஒட்டு மொத்தமாகக் கூறப்படுகிறது. ஆனால் மாவட்ட ரீதியாக அரசாங்க அதிபர்கள் வெளியிடும் தகவல்களைப் பார்க்கையில் வடக்கில் மட்டும் நெற்செய்கை பண்ணப் பட்டுள்ள் நிலங்களில் 50000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மழை பொய்த்துப் போனதால் ஏற்பட்டுள்ள இந்த வரட்சியின் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் 50000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடன் சுமைக்கும் வறுமைக்கும் உள்ளாகும் என்பதை அரசாங்க அதிபர்களின் அறிக்கைகளிலிருந்து கணிக்க முடிகிறது. கால நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் குடிநீர் தட்டுப் பாடும் உணவுப் பயிர்களுக்கான நீர்வள அளவுகளும் குறைந்து வருகின்றமை உலகம் முழுவதும் பொதுவாகவே நிகழ்ந்து வருகிறது.

இலங்கையிலும் அதன் பாதிப்பு இயல்பாக தொடர்கிறது. அரசாங்கங்களும், சர்வதேச அமைப்புகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், நீர்வள வாய்ப்பு அளவுகளை உயர்த்துதல் அவசியம் என மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டாலும், அதற்காக பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்கிற போதிலும், இலங்கை போன்ற நாடுகளில் அதற்காக உலகநாடுகள் மற்றும் உலக அமைப்புகளிடமிருந்து கடன் உதவிகள் மற்றும் நன்கொடைகளைப் பெற்றாலும் நீர்வளங்களில் அதிகரிப்பு ஏற்படுவதாக இல்லை. மாறாக கண்மூடித்தனமான தொழில் மயமாக்கல்களும் மலைகளை, நதிகளை, நிழக்கீழ் நீர் வளங்களை சூறையாடும் பொருளாதார நடைமுறைகளும் இங்கு ஆதிககம் பெற்றிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் சீவனோபயத்திற்காக விவசாயத்தில் ஈடுபடுகின்ற இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் நிலத்தின் அடிப்படையிலான தமது வாழ்வாதரங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாமல் வாழ்வா சாவா என வருடம் தோறும் போராடி வருகிறார்கள். வறட்சியை தாங்கக்கூடியதாகவும், குறைந்த நீரில் பயிர் செய்யக்கூடியதாகவும், ஒப்பீட்டுரீதியில் கூடுதலான வருமானம் தரக் கூடியதாகவும் பயிர் வகைகளை விவசாயம் செய்பவர்களாகவும், பொருத்தமான பயிர் செய்யும் நுட்பங்களை கையாள்பவர்களாகவும் வறிய மற்றும் சிறிய விவசாயிகள் மாற வேண்டும். அதற்கு அவர்களிடம் போதிய மூலதனமோ, கல்வி அறிவோ கிடையாது. விவசாயிகள் பொருத்தமான பயிர்களையும் புதிய விவசாய நுட்பங்களையும் நோக்கி மாறுவதற்கு அவசியமான அரச சேவைக் கட்டமைப்புகள் வினைத் திறனுடையவையாக இல்லை.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்கள் "உணவு உற்பத்தியை பெருக்குவோம்", "இயற்கை முறையிலான விவசாயத்தை ஊக்கிவிப்போம்", "இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்", "வறுமையை ஒழிப்போம்" என அண்மைக்காலத்தில் நாட்டுக்கான பொருளாதார சுலோகங்களை முன்வைக்கிறார். ஆனால் நடைமுறையில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் வறட்சியின் பாதகங்களை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

இந்தியாவின் பல மாநிலங்களில் வறட்சியின் காரணமாக கடந்த இரு தசாப்தங்களாக ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்காண விவசாயிகள் தற்கொலை செய்வது சர்வசாதாரானமான விடயமாகியுள்ளது. தமிழ் நாட்டில் காவிரி, வைகை, பெண்ணை, தாமிரபரணி, பவானி, பாலாறு என நதிகள் ஓடினாலும் இப்பொழுது அங்கும் தொடர் வறட்சியின் காரணமாக தமது பயிர்கள் கருகுவதைக் கண்டு விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்யத் தொடங்கியுள்ளனர். விவசாயிகளின் தற்கொலைகள் ஒரு கட்சியினரின் ஆட்சியை மற்றக் கட்சியினர். தேர்தல்களில் கைப்பற்றுவதற்கு மட்டுமே உதவுகிறது. வறட்சியில் மாற்றம் ஏற்படுவதாக இல்லை - விவசாயிகளின் வாழ்கையிலும் மாற்றம் ஏற்படுவதாக இல்லை - விவசாயிகளின் தற்கொலை தொடர்கதையாகியுள்ளது.

தமது பயிர்கள் கருகுவது கண்டு ஏழை விவசாயிகள் இலங்கையில் இன்னமும் தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்க வகையில் ஆரம்பிக்கவில்லை. இப்பொழுது உள்ள நிலைமை தொடருமானால் இலங்கையில் உள்ள ஏழை விவசாயிகளின் நிலைமையும் அதுவாகவே ஆகலாம் என்பதை உணர்ந்து மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் முன்னெச்சரிக்கையோடு உடனடியாக செயற்படும்.

இலங்கையின் மத்திய மாகாண அமைப்புகளில் விவசாய அபிவிருத்தி, விவசாய விரிவாக்கம், விவசாய சேவைகள் என பல நிர்வாக கட்டமைப்புகள் இருக்கின்றன. அதில் உத்தியோகத்தர்களாகவும் ஊழியர்களாகவும் பல்லாயிரக்கணக்காணோர் சம்பளங்களையும் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு இருக்கின்றனர். ஆயினும், சூழல் மற்றும் கால மாற்றங்களுக்கு ஏற்ப விவசாயிகளின் வாழ்க்கைப் பாதுகாப்பிற்கும், உணவுப் பயிர்களின் உற்பத்தி வளர்ச்சிக்கும் இருக்கின்ற அரச நிர்வாக கட்டமைப்புகளும், அதன் கதிரைகளில் இருந்து ஊதியம் பெறுகின்றவர்களும் எவ்வளவு தூரம் தமது கடமைகளை ஆற்றுகிறார்கள் என்பது இங்கு கேள்விக் குறியாக உள்ளது.

வீணே உண்டு கழித்திருப்போர் அதிகமாகவே உள்ளனர்! இங்கே உழுதுண்டு வாழ்பவர்கள் எல்லாம் அழுது கண்ணீர் வடிக்கின்றனர்.

---

ஜனநாயக சமூக அக்கறை கொண்டதாக இலங்கையின் பிரதான அரசியல் போக்கு தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ள இன்றைய நிலையில், இங்குள்ள தமிழ் தலைமைகளுக்கு கொஞ்சமாயினும் அதிகாரப் பகிர்வு தொடர்பான அக்கறை உண்மையிலேயே இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை அவதானித்தால், எட்டாக் கனிகளுக்கு ஆசைப்பட்டு, கிடைத்தவற்றை அலட்சியமாகத் தொலைத்ததே தமிழர்களின் வரலாறாக இருக்கிறது.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு அதற்கான அடிப்படை நிர்வாக கட்டமைப்புக்கள் வலுவாக கட்டியெழுப்பப்பட்டன. ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருந்த அதனை பிரேமதாசா-பிரபாகரன் கூட்டணி தொடர்ந்து செயற்பட முடியாததாக ஆக்கியது. ஆனால், புலிகளின் எடுபிடிகளாக இருந்து இப்போது தமிழர்களின் தலைவர்களாக இருப்பவர்கள் இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாண சபையை மீள முன் எடுத்துச் செல்வதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை - அதற்கான நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் இந்தத் தமிழ் தலைமைகளிடம் இருக்கவில்லை.

அக்கறை காட்டுவதை விட, திரு. விக்கினேஸ்வரன் தம்மை அதிதீவிர தமிழ்த் தேசியவாதியாகக் காட்டிக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறார்.

துரதிஸ்டவசமாக, இருக்கும் அதிகார யந்திரத்தைக் கொண்டு மக்களுக்கான் கீரியங்களை ஆற்றுவதில் அவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்தவில்லை. தமிழ்த் தலைமைத்துவம் இவ்வாறிருக்கும் போது மாகாண சபை அராஜகமான பட்டி மன்ற மண்டபமாகவே அமையும்.

தமிழ்த் தேசிய (கதம்ப) கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரோ மாகாண சபை விடயங்கள் தமக்கு சம்பந்தமில்லாத சங்கதிகள் என்பது போல நடந்து கொள்கின்றார். சம்பந்தர் குழுவினருக்கும், விக்கினேஸ்வரன் குழுவினருக்கும் இடையே தொடர்ந்து இழுபறியும் நிலவுகிறது.

கிழக்கின் நிலைமைகளிலும் விதிவிலக்கில்லை. வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே ஒன்றுக்கொன்று அனுசரணையாக செயற்படும் பண்புகளும் இல்லை. வடக்கிலென்ன! கிழக்கிலென்ன! மாகாண சபைகள் எக்கேடு கெட்டால் என்ன என்ற போக்கையே தமிழத் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் பின்பற்றி வருகிறது.

## இருட்டிலேயே வளர்ந்தவனுக்கு வெளிச்சம் கூச்சமாகும்

புலிகள் எதையெல்லாம் நிராகரித்தார்களோ அதனையே மிதவாதத் தலைமை என்று சொல்லப்பட்டவர்களும் செய்து வந்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் அதனை கொள்கையளவில் ஏற்றிருந்தார். அதற்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

இணைந்திருந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையை தொடர்ந்து நிராகரித்து வந்தவர்கள் 2009 யுத்தம் முடிவடைந்த பின் வடக்கு வேறு, கிழக்கு வேறு எனப் பிரிக்கப்பட்ட பின் புலிகள் இல்லாத காலத்தில் விழுந்தடித்துக்கொண்டு மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றி பதவியைப் பிடித்தார்கள்.

மாகாண சபையை செயற்படுத்தும் அக்கறை எதுவும் கொண்டவர்களாக அவர்கள் இல்லை. மாறாக தமது வாக்கு வங்கி அரசியலில் தமது செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காகவே அவர்கள் மாகாண சபைத் தேர்தல்களில் பங்கு பற்றி பதவிகளைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்களிலும், மாகாண சபைத் தேர்தல்களிலும் தமிழ்க் கூட்டமைப்பினர் பங்குபற்றி மக்களுக்கு உசுப்பேத்தி பதவிகளைக் கைப்பற்றுவது கொழும்பு மைய அரசியலில் தமது செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கும், தமது சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்குமே தவிர, இனப்பிரச்சனைக்கோ அல்லது சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கோ தீர்வுகள் காண்பதற்காக அல்ல.

உதாரணமாக வடக்கு முதலமைச்சர் என்ற அடிப்படையில் தமக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில்

2009 இற்கு பின் , வடக்கு கிழக்கின் உள்ளூராட்சி சபைகளையும், மாகாண சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பரவலாக நிறைத்திருந்தார்கள். இன்று வரை அப்படியேதான் தொடர்கிறது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் பாரம்பரிய தொழில் துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல், புதிய தொழில் துறைகளை நிறுவுதல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேண்தகவு செயற்பாடுகளை மேற்கொள்ளல் என பல காரியங்களை சாதித்திருக்க முடியும். ஆனால் இங்கு எதுவுமே நடைபெறவில்லை.

எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலைமைகளே நிறைந்திருக்கின்றன. அவை தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் உணர்வுகளை திசை திருப்புவதாக தமிழர்களின் உரிமைகள் பற்றிய புரளிக்கதைகளைக் கிளப்பி விடுவதில், இந்த தமிழ் அரசியல் வேடதாரிகள் வல்லவர்களாக உள்ளனர்.

லட்சத்திற்கு மேற்பட்ட மக்களும் பல்லாயிரம் போராளிகளும் மடிந்த மண்ணில் மிச்சமாகி இருப்பது இந்த ஊழல் மோசடிப் பேர்வழிகளின் மொள்ளைமாறி அரசியல் தான்.

இந்த 30 வருட இழப்புகள் பற்றி இந்த ஊழல் மோசடி சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளிடம் பரந்துபட்ட மக்களின் நலன்கள் தொடர்பான பிரக்ஞைகளை எதிர்பார்ப்பது அர்த்தமற்றதுதான்.

ஆனால், இந்த பேர்வழிகளை தலைவர்களாக தமிழ் மக்கள் நம்பும் வரை, இன்று நிலவும் துர்ப்பாக்கிய தலைவிதி தொடரவே செய்யும். திருத்த முடியாத மக்களுக்கு திருடர்களே தலைவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே வெளி அதிகரிப்பு! வெறும் வேறுபாடா? விபரீதமான முரண்பாடா?



கடந்த ஆண்டும். இந்த ஆண்டும் நிதி அமைச்சர் தமது அரச வரவு செலவுத் திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் தமது ஆட்சியின் பொருளாதார அணுகுமுறைகளை முன்வைத்தார். அதில் அவர் பெரும்பாலும். 1977ம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது ஆரம்பிக்கப்பட்ட திறந்த தாராளமய பொருளாதார அணுகுமுறையின் அடிப்படையில் நாட்டை மேலும் ஒரு கட்டத்துக்கு முன்னகர்த்துவதிலேயே குறியாக உள்ளார் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

## பிரதமர் ரணிலின் பொருளாதார இலக்கு

இலங்கையை சிங்கப்பூராக்குவதே தனது இலக்கு என ஜெயவர்த்தனா அன்று கூறினார். ரணில் அவர்களும் அதனையே வேறுவிதமாகக் கூறுகிறார். 3000 மில்லியன் மக்களைக் கொண்ட தென்னாசியா. தென்கிழக்காசியா மற்றும் சீனா உட்பட்ட பிரதேசத்தில் ஒரு தலை சிறந்த பொருளாதாரமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதே தமது இலக்கு என ரணில் குறிப்பிடுகிறார். இலங்கையின் பொருளாதாரம் மத்திய தர வருமான நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்து விட்டதாகவும். அடுத்த கட்டமாக இலங்கையை அபிவிருத்தி நாடுகளின் பட்டியலில் இணைப்பதே தமது இலட்சியம் எனவும் பிரதமர் குறிப்பிடுகிறார்.

யதார்த்தத்தில் இலங்கையின் பொருளாதாரம் மத்திய தர வருமானம் கொண்ட நாடுகளின் தராதரத்தில் உள்ளதா என்பதற்கான தெளிவான விளக்கத்தைத் தர வேண்டியவர்கள் பொருளாதார நிபுணர்களே! இலங்கையின் பொருளாதார அம்சங்கள் பலவற்றின் நிலைகளைப் பார்க்கையில். அவை இலங்கை ஒரு குறைந்த வருமான நாடு என்ற கட்டத்தைத் தாண்டி விட்டதா என்ற கேள்வியை வலுவாக எழுப்பிக் கொண்டிருப்பனவாகவே உள்ளன.

## ஜனாதிபதியின் மாறுபட்ட பொருளாதார அணுகுமுறை

இதற்கிடையில். ஜனாதிபதி சிறிசேனா அவர்கள் சிங்கப்பூர் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை அணுக முடியாது - அணுகக் கூடாது என்கிறார். இலங்கையின் சமூக பொருளாதார அமைப்பில் இன்னமும் வறுமை ஒரு பிரதானமான அம்சமாக இருப்பதை ஜனாதிபதி அண்மைக்காலங்களில் வலியுறுத்தி வருகிறார். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை விவசாய வளர்ச்சி மற்றும் கிராமங்களின் அபிவிருத்தி என்பதன் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் பொருளாதார அணுகுமுறை என இலங்கையின் இராஜாங்க நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இவர் சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

ஜனாதிபதி தலைமையிலான சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் அமைத்த கூட்டரசாங்கத்தில் அரச படைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு ஆகியன ஜனாதிபதிக்குரிய விடயங்களாகவும். நிதி நிர்வாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றன பிரதமருக்கு உரியதாகவும் என பிரதான அதிகாரங்களை இரண்டு கட்சிகளும் பகிர்ந்து கொண்டன. ஆனால் அண்மைக் காலங்களில் இலங்கையின் நிதி நிர்வாகத்தில் ஏறபட்டுள்ள சிக்கல்களும் இலங்கையின் பொருளாதாரம் எதிர்நோக்கும் நெருக்கடிகளும் கூட்டாட்சிக் கட்சிகளின் உறவில் விரிசல்களை விரிவுபடுத்தி வருகின்றன.

## தத்தமது கட்சி நலன் கவலைகளால் கேள்விக்குள்ளாகும் மக்களின் நலன்கள்

சிறி லங்கா சுதந்திரக் கட்சியானது இந்நாள் ஜனாதிபதியின் தலைமையில் ஒரு பிரிவு மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸாவின் தலைமையில் ஒரு பிரிவு என பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பிளவுபட்டுக் கிடக்கின்றது. இந்தப் பிளவு அரசியல் ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர் காலத்துக்கு சாதகமானது என பார்க்கப்படுவதால் சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் தமது எதிர்காலம் பற்றி அதிக கவலை கொள்ளத் தொடங்கியுள்ளனர். மேலும் ரணில் விக்கிரமசிங்காவின் கடந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியில் மக்கள் திருப்திப்படும் வகையாக பொருளாதார நிர்வாகம் கவனிக்கப்படவில்லை என்ற அபிப்பிராயமே தலைதூக்கி நிற்கிறது. அத்துடன். ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளும் வலுப்பட்டு வருகின்றன. அதன் பாதகங்களால் ஏற்படக் கூடிய விளைவுகளை சுமப்பதற்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் தயாராக இல்லை.

இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிதி மற்றும் பொருளாதார நிர்வாகத்துக்கும் சம்பந்தமில்லை என்பது போல கூறத்தொடங்கியிருக்கிறார்கள் என்பதன் பிரதிபலிப்பே ஜனாதிபதி அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் அவரது பொருளாதார அணுகுமுறை பற்றிய கருத்துக்கள் என்றே புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பிரதமரின் பொருளாதார அணுகுமுறைக்கு மாறாக. வேறாக ஜனாதிபதி பகிரங்கமாக வெளியிட்டு வரும் கருத்துக்களின் அரசியல் விளைவுகள் நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியூட்டுபவையாக அமையலாம்.

---

## தோல்வி உணர்வுகளுடன் முடியும் 2016 அரசியல் பரபரப்புடன் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

தினை நடத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்கள் 2016 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தமிழர்கள் விரும்புகின்ற அரசியற் தீர்வை தாங்கள் சாதிக்கப் போவதாகக் கூறியே 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை அள்ளிப் பெற்ற குதூகலத்துடன் பாராளுமன்றம் சென்றார்கள் - நல்ல பதவிகளும் சுகபோகங்களும் நிறையவே பெற்றார்கள். ஆனால், இப்போது 2016ம் ஆண்டு முடிவடைந்து விட்டது. தமிழர்களுக்கு இப்போது இவர்கள் என்ன புதுக்கதை விடலாம் என்று கண்டு பிடிக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். அதன் தலைவர் சம்பந்தன் அவர்கள் தமிழினப் பிரச்சினையையே தமது வியாபாரப் பண்டமாகப் பயன்படுதிக் கொள்பவர் என்றாலும், இப்போது அதனைக் காட்டிக் கொள்ளாமலே, பத்திரிகைகளுக்கு அவர் வெளியிட்டுள்ள தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில், இப்போதுதான் திடீரென முழித்தவர் போல நாட்டின் வறுமை ஒழிப்பு பற்றி பேசுகிறார்.

### அரைத்த மாவை அரைக்கும் விக்கியரின் பேரவை

“வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாத -சமஷ்டியாக இல்லாத அரசியற் தீர்வை ஏற்க மாட்டோம்” என்று சூழுரைத்து “எழுக தமிழ்” நடத்திய முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவைக்காரர்களுக்கு இப்போது அரசாங்கம் தரும் அரசியற் தீர்வை ஏற்பதா? ஏற்க வேண்டாமா? என்ற கேள்விக்கே இடமில்லாமல் - அரசியற் தீர்வு பற்றி மூச்சே விடாமல் 2016 கடந்து போய்விட்டது. விக்கியின் பேரவைக்காரருக்கு மட்டக்களப்பில் எழுக தமிழே! வவுனியாவில் எழுக தமிழே! என அரைத்துப் புளித்துப் போன மாவை மீண்டும் மீண்டும் அரைப்பதைத் தவிர வேறெந்தத் திசையும் தெரியாமல் தடுமாறி நிற்கிறார்கள்.

### மீண்டும் வீராப்பு மேடை வசனங்கள்

உள்ளூர் மேடைகள் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் முழங்கும் தமிழ்த் தேசவாதிகளின் குறுகிய அரசியலில் மூழ்கியபடியே தமிழர்களின் பிரதேச அரசியல் 2016 ஆம் ஆண்டை ஓட்டியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சாத்தியங்களை 2017ம் ஆண்டு அதிகமாகவே கொண்டுள்ளது. அதனை நோக்கி தமிழ்தேச வித்தைக்கார அரசியற் கட்சிகள் இப்போதே தமது பரபரப்புகளை தொடங்கிவிட்டனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக, மேலே கூறப்பட்டுள்ள ஆறு முக கோரிக்கைகளில் எதனையும் தமிழரசுக் கட்சி தூக்காமல் கிடப்பில் போட்டு வைத்திருந்தது. இப்போது இதற்கு மேல் “நல்லாட்சி” யோடு பெரிய அளவில் இணக்க வியாபார அரசியலை தொடருவது சிரமம் என்பதால் சம்பந்தரும், அவரது வாரிசு சுமந்திரனும் மீண்டும் இந்த ஆறுமுக கோரிக்கைகள் கொண்ட பதாகைகளை தூசி தட்டி எடுத்து, வீராவேச வசனங்களை முழங்கியபடி வடக்கு அரசியலில் கொடி கட்டுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

இவற்றிற்கு மாற்றாக, இனியாயினும் உண்மையான நேர்மையான பாதையில் தமிழர்களின் அரசியல் முன்னேறுவதற்கு வழிகாட்டக் கூடிய தூரத்து நட்சத்திரம் வானத்தின் எந்த மூலையிலிருந்தாயினும் தோன்றுமா என்ற கேள்வியுடன் 2017 ஆம் ஆண்டு விடிந்திருக்கிறது.

### அரசியல் பதட்டத்தில் தென்னிலங்கை

வடக்கு-கிழக்கு மக்களை சோர்வுகளுடன் தொங்கியபடி இருக்கவிட்டு 2016 போக, தென்னிலங்கையில் பரபரப்பான அரசியலைக் கிளப்பியபடி 2017 தொடங்கியிருக்கிறது.

ஒருபக்கம், இப்போதிருக்கும் மைத்திரி-ரணில் கூட்டாட்சியை இந்த ஆண்டுக்குள் கவிழ்க்கப் போவதாக மஹிந்த ராஜபக்ஸா சூழுரைக்கிறார்.

மறுபக்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அவரது அமைச்சர்களும் இந்த ஆட்சியை 2020 ஆம் ஆண்டு வரை யாராலும் அசைக்க முடியாது எனவும், 2020ம் ஆண்டிலும் தாங்களே ஆட்சியை அமைப்பார்கள் என்றும், முடிந்தால் ராஜபக்ஸா இப்போதிருந்தே முயற்சிக்கலாம் என்றும் சவால் விடுகின்றனர்.

இன்னொரு பக்கம், ஜனாதிபதி சிறிசேனாவும் அவரைச் சார்ந்துள்ள அவரது கட்சிக்காரர்களும், இப்போதிருக்கின்ற ஆட்சியை ராஜபக்ஸாவாலோ அல்லது வேறும் யாராலுமோ கவிழ்க்க முடியாது என்று கூறுகின்றனர். அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி நடத்தும் முறையுடன் ஒத்துப் போக முடியாதவர்களாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார அணுகுமுறையை பகிரங்கத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாவும், மத்திய வங்கியின் கடன் பத்திர விவகாரத்தில் பெரும் ஊழல் மோசடி நடைபெற்றிருக்கிறது என்பதை நிராகரிக்க முடியாதவர்களாகவும் சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கின்றனர். இதனால், இரண்டு ஆண்டுகள் மட்டுமே நிறைவடைந்துள்ள “நல்லாட்சிக் கூட்டரசாங்கத்தை” தொடரவும் முடியாமல், கைவிடவும் முடியாமல் “ஆப்பிழுத்த குரங்கு” போல் விழி பிதுங்கி நிற்கிறார்கள் என்பது தெரிகிறது.

### வேணும்! ஆனா வேண்டாம்! எனும் ஜே.வி.பி

இதேவேளை, ராஜபக்ஸாக்களை கர்ண கடூரமாக எதிர்க்கும் ஜே.வி.பி காரர்கள் “நல்லாட்சி” கூட்டரசாங்கத்தை பகிரங்கத்திலாயினும் விமர்ச்சிக்க வேண்டிய அரசியலைக் கொண்டிருக்கின்றனர். இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க முனைபவர்களோடு கூட்டமைக்க முடியாமலும், இந்த அரசாங்கத்திலுள்ள கட்சி எதனோடும் ஒட்டி வாழவும் முடியாமலும் உள்ள ஜே.வி.பியினருக்கு ராஜபக்ஸாவும் ஆட்சிக்கு வரக் கூடாது, அதேவேளை ரணிலும் ஆட்சியில் இருக்கக் கூடாது, மைத்திரி-ரணில் கூட்டாட்சி தொடரவும் கூடாது, அதேவேளை மைத்திரியும் மஹிந்தவும் ஒற்றுமைப்படவும் கூடாது எனவும் உள்ளனர். தங்களின் தலைமையில் ஆட்சி அமைக்கலாம் என்ற கற்பனைக் கனவு தமக்கு இல்லை எனவும் கூறுகின்றனர். எனவே ஜே.வி.பியினர் 2017ம் ஆண்டுக்கான தமது அரசியலை அந்தரத்தில் கொடி பிடித்தபடி கொண்டு செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

### கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்ட மக்கள்

- வெளிநாட்டுக் கடன் சுமை அபரிமித அதிகரிப்பு:
- தேசிய நாணயத்தின் அந்நியச் செலாவணி பெறுமதியின் தொடர்ச்சியான வீழ்ச்சி:
- பெற்றோலியப் பொருட்களின் சர்வதேச விலைகளில் தொடரும் உயர்வு:
- ஏற்றுமதி வருமான வீழ்ச்சி! இதனால் வர்த்தக நிலுவையின் அதிகரிப்பு:
- ஏதிர்பார்க்கும் வெளிநாட்டு முதலீடுகள் வரமுடியாதபடி சர்வதேச அரசியல் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள்,
- உள்நாட்டு உற்பத்திகளில் அதிகரிப்பின்மை - மாறாக பலவற்றில் வீழ்ச்சி
- அத்தியாவசியப் பண்டங்களின் விலையேற்றம் - இதனால் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு:
- உள்நாட்டு அபிவிருத்திட்டங்கள் நிறைவேற்றப் படுவதில் உள்ள மந்தம்,

மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் கைகளை மீறி கட்டுப்பாடற்று செயற்படுகின்றன என்பதோடு தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள அரசியல் உறுதியின்மைகளோடு 2017ம் ஆண்டு தொடங்குகிறது.

அரசியற் சூறாவளிக்கான அமுக்கங்கள் பாராளுமன்ற வளாகத்துக்கு உள்ளேயே ஒதுங்கி விடவேண்டும் - பொருளாதார வீக்கங்களும் வீழ்ச்சிகளும் தாங்கக் கூடிய வீதாசாரங்களுக்கு உள்ளேயே இடம்பெற வேண்டும் - இவையே இலங்கையின் பரந்துபட்ட அனைத்து இன மக்களதும் குறைந்தபட்ச விருப்பமாகும். குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதே அரசியல்வாதிகளுக்கு வசதி, ஆனால், அதன் விளைவான சகதிச்சுழிகள் பரந்துபட்ட பொதுமக்களை இழுத்து மூழ்கடிக்காவிடின் அதுவே பெரும் புண்ணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பொதுவாக சமூக அக்கறை உள்ள தலைவர்கள் சமூகச்செயற்பாட்டாளர்கள் , பொதுவுடைமை வாதிகள் வறுமை ஒழிப்பு, உணவு, இருப்பிடம், சுகாதாரம், கல்வி மற்றும் இயற்கைவளங்களை பாதுகாத்துக் கொண்டு பேண்தகவு துறையில் முன்னேற முயல்வார்கள். அவர்களிடம் பெரிய சொத்துக்கள் எதுவும் இருக்காது எளிமையான வாழ்க்கைமுறை இருக்கும். விதிவிலக்குகள் இருக்கலாம்.

அமெரிக்காவின் தேர்தலில் கூட கல்வி சுகாதாரத் துறைகளுக்கான ஒதுக்கீடுகள் பற்றிய பிரச்சனைகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

பொருளாதார தடைகள் மத்தியில் கியூபாவின் சாதனை என்று உலகமே ஒத்துக்கொள்ளும் இரண்டு பிரதான விடயங்கள் அதன் கல்வி சுகாதாரத்துறைகளின் வெற்றிகரமான நிலை

இந்திய தமிழகத்தைப் பொறுத்தவரை கல்வி வேலை வாய்ப்புக்களுக்கான சமூக நீதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு .

பெண்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வது குடும்ப அட்டைகளுக்கான உணவு அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையில் வினியோகம்

மருந்து, உணவு, குடிநீர் என்பன நியாயமான முறையில் கிடைப்பதற்கான ஏறபாடுகள் செய்யப்படுகின்றன.

ஆனால், வடக்கு தமிழ் தலைவர்களுக்கு இத்தகைய விடயங்கள் சுவரசியமானவை அல்ல . தமது தனிப்பட்ட வாகன வீட்டு வசதிகளை பெற்றுக் கொள்வதில் காட்டும் தீவிர ஆர்வத்தை சமூகத்தின் ஜீவாதார விடயங்களில் காட்டுவதில்லை. எளிமையான வாழ்வும் அவாக்ளுக்கு கிடையாது.

அவர்கள் பேருந்துகளிலோ ரயில்களிலோ பிரயாணம் செய்பவர்களும் அல்ல.

லத்தீன் அமெரிக்கா ஐரோப்பா ஸ்கன்டினேவிய நாடுகளில் அப்படியான தலைவர்கள் இருக்கிறார்கள்.

இங்கு அது இழிவென்று கருதப்படுகிறது.

அவசியமில்லாத இடத்தில் கூட தமக்கிடையே ஆங்கிலத்தில் பேசிக்கொள்ளும் கனவான்களும் இருக்கிறார்கள்.

இரண்டு கற்ற சிங்களவர்கள் தமக்கிடையே உரையாடும்போது சிங்களத்திலேயே உரையாடுவார்கள்.

மாலையில் மன்னார் யாழ்ப்பாணம் பாலத்தில் போய்பார்த்தால் தெரியும் . அரச வாகனங்களில் குடும்பம் உற்ற சுற்றத்துடன் தூயகாற்றைச் சுவாசிக்க வந்திருப்பார்கள்.

ட்ரவ்சரை மடித்து விட்டு கிழிந்த செருப்புடன் ஆண்களும் பெண்களும் போராடிய மண்ணல் அரசியலும் அதிகாரமும் இப்படி நாளும் பொழுதும் கனவான்கள் சீமாட்டிகள் மயமாகிக் கொண்டிருக்கிறது.

சாதாரண மக்கள் இவர்களுக்கு சங்கடமானவர்கள் அவர்களுடனான தொடர்புகளை இயலுமானவரை தவிர்ப்பதையே இவர்கள் விரும்புவார்கள்.

நான் சில இடங்களுக்கு பேருந்தில் பயணம் செய்யும் போது தோழர்கள் நண்பாகள் சிலரே கேட்கிறார்கள் பஸ்சிலையா வந்தனீங்க எண்டு.

அவர்களில் தவறில்லை. நவதாரளவாதமும் புதிய சமகால தமிழ் அரசியல் கலாச்சாரமும் அத்கைய நிலையை உருவாக்கியுள்ளது.

பொதுப்போக்குவரத்தை உபயோகிப்பதே ஒரு இழிந்த விடயம் என்ற மாதிரி

ஒரு காலத்தில் மேலிருந்து கீழ் சைக்கிள் கலாச்சாரம் நிலவிய ஊர் இப்படித்தான் சிந்திக்கிறது.

கிராமங்களிலும் அப்படித்தான் பக்கதில் உள்ள தெரிந்தவர் வீட்டிற்கு கடைக்கு நடந்து சென்றால் நடந்தா போகிறீகள் என்று கேட்பார்கள்.

பொதுப் போக்குவரத்தை ஒரு நாள் முதலமைச்சர் மாதிரி ஒரு நாள் தன்னும் பயணம் செய்யாதவர்கள்




சாதாரணமானவர்கள் போல் நடந்து கொள்வது இழிவென்று கருதுபவர்கள் சமூகத்தின் தலைவர்களாக-

ஒரு சமூகத்தின் சுயமரியாதை கௌரவம் இன்னொரு சமூகத்தனால் பாதிக்கப்படுவது பற்றி பேசுவது எவ்வளவு தூரம் நம்பகரமானது.

சொந்த சமூகம் என்று சொல்லப்படுவதிலேயே சமூக நீதியை மறுக்கப்படுவதை இயல்பானதென்று கருதுபவர்கள் இன பார பட்சம் பற்றிப் பேசுவது போலியா உண்மையா.

ஐரோப்பா வட அமெரிக்காவில் 1.5 மில்லியன் பேர் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள் .ஆனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் எத்தகைய வேலைகளையும் கால நிலை ஒவ்வாமைகளுக்குள்ளும் இரவு பகல் பாராது தமது வேலைகளைச் செய்கிறார்கள்.

வீட்டு வேலைகளையும் பகிாந்து கொள்கிறார்கள். இங்கு நமது அரசியல் தலைவர்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் "சிண்" வைத்துச் செயற்படுபவர்கள்.

ஆரம்ப காலங்களில் இயக்கங்களில் இருந்தவர்கள் தலைவர்கள் விதி விலக்குக்கள் இருந்தாலும் எளிமையாக வாழ்ந்தார்கள்.

பல்லாயிரக்கணக்கானோர் இந்த போராட்டத்தில் படு கொலை செய்யப்பட்டோ இயற்கையாகவோ மரணித்த பின் இந்த இயக்க பின்புலங்களில் இருந்து வந்தவர்கள் வந்த பாதையை மறந்து ஆடம்பர பகட்டு வாழ்ககைக்குள் நுழைந்திருக்கிறார்கள்.

சமகால வேகமான உலகத்தில் தேவை கருதிய வாழ்க்கை முறையை மறுக்கமுடியாது.

ஆனால், இயக்கங்களில் இருந்தவர்கள் பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ்வாழ்கிறார்கள். கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள். அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன.

ஆனால், இந்த தலைவர்களும் சமூக செய்றபாட்டாளர்களும் இந்த வறுமையை சுமந்தவர்கள் மீது தீண்டாமை பாராட்டுகிறார்கள். முகம் சுழிக்கிறார்கள்.

இயக்க வாழ்வு எளிமை என்று தலைமைத்துவங்களை அந்த நாளில் இருந்து அலங்கரித்தவர்கள் இன்று எப்படி இருக்கிறார்கள். இது அறவாழ்வா என்று சிந்திக்க வேண்டும். விதிவிலக்கானவர்கள் வந்த வழியை மறக்காதவர்கள் மிகச் சிலர் இருக்கிறார்கள்.

இது தான் உலக இயல்பு இதைப்பற்றி நான் ஏன் எழுதுகிறேன் என்று கேட்கலாம். இத்தகையவர்களுக்கு சமூக நேர்மை இருக்குமா என்பதே முக்கிய கேள்வி.

சாதாரண மக்களின் வாழ்க்கைமுறையின் அடையாளங்களைத் தன்னும் தரித்துக் கொள்ள முடியாதவர்கள் எவ்வாறு மக்களுக்கு விசுவாசமாக இருக்கமுடியும் மக்கள் பற்றிய அவர்களின் எண்ணங்கள் எப்படி இருக்கும்.

சாதாரண சிறு திருட்டுக்கெல்லாம் கம்பி எண்ணுபவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால், சமூகத்தை கொள்ளை அடித்தவர்கள் ஊருக்கெல்லாம் வெளிச்சம் போடக் கொடுத்த பணத்தில் வாழ்பவர்கள் கனவான்கள் போல் உலா வருகிறார்கள்.

நிர்வாக யந்திரத்தில் இருக்கும் அதிகார வர்க்கம் அது கிராம சேவையாளர், பொலிஸ் நிலைய மட்டத்தில் இருந்து மேல் வரை பொது மக்கள் என்போர் தமது நேரத்தையும் காலத்தையும் விரயம் செய்பவர்கள். அவர்கள் முன் சிரிக்க கூடாது நட்பாக பழக கூடாது இறுக்கமாக முகத்தை வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்.

ஆனால், இந்த நிலை வட ஐரோப்பிய ஸ்கன்டிநேவிய நாடுகளில் அரிது.

சாதாரண மனிதனுக்கு கொஞ்சம் சுயமரியாதை இருக்கிறது. அந்த நாடுகளுக்கு விஜயம் செய்யும் நமது அரசியல் தலைவர்கள் இங்கு கைத்தடிகளை வைத்திருக்கவே விரும்புகிறார்கள். அரசசார்பற்ற நிறுவனங்களப் பற்றி பேசவே வேண்டாம் அனேகமானவை பெருமளவு பணத்தை தமது நிர்வாகச் செலவுக்கு எடுத்துக் கொண்டு சனங்களுக்கு பிச்சை போட்டு விட்டு ஆடம்பர வாகனங்களில் சென்று சுப்பர் மார்க்கட்டுக்களில் கொள்வனவு செய்பவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

யாழ் மையவாத அதிகார வர்க்கத்தினர் சேவைத் துறையினர் என்று சொல்லப்படுபவர்கள் உட்பட தாம் மனிதர்கள் அல்ல. வானத்தின் தேவர்கள் என்று நினைக்கிறார்கள்.

இத்தகைய மனநிலை செயற்பாடு ஆதிக்கம் செலுத்தும் சமூகம் உருப்படுவது தலையெடுப்பது மிக மிகக் கடினம்.

மனிதம் மதிக்கப்படுவதற்கான இடை வெளி கொண்ட சமூகங்களே தலை நிமிர முடியும்.

பொய்முகங்கள் ஆதிக்கம் செலுத்தும் சமூகங்கள் உருப்படமுடியாது.

காந்திய எழிமை வேண்டும். மக்களின் வாழ்க்கை பற்றிய இடையறாத தரிசனம் கொண்ட தலைவர்கள் வேண்டும். அப்படியில்லாமல் இன்றைய மோசடி தலைமைத்துவங்கள் தொடருமானல் அதை நீடிக்க மக்கள் அனுமதித்தால் எஞ்சியிருக்கும் வாழ்வும், வளமும் அழிவுறும்.

# இலங்கையில் ஆட்சியை ஆட்டும் சீன முதலீட்டு வலயங்கள்

சீனா. அம்பாந்தோட்டையில் கடனாகக் கட்டிக் கொடுத்த துறைமுகமும், விமான நிலையமும் வர்த்தகரீதியில் தோல்வியான திட்டங்களாக அமைந்தன. அவற்றை வெற்றிகரமானவைகளாக ஆக்க முடியுமா? முடியாதா? எனும் கேள்விகளுக்கு விடை தேடுவதை விட அந்தக் கடன்களை மீளத் திருப்புவதற்கு மாற்றுத் திட்டங்களை ரணில் விக்கிரமசிங்கா அரசு தேடிக்கொண்டிருந்தது. சீனா "15 ஏக்கர் நிலங்களை தாருங்கள் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரு வோம்" என அறிவித்தமையை வாய்ப்பாக பற்றிப் பிடிக்க முற்பட்ட ரணில் அரசாங்கம் இப்போது சங்கடத்தில் மாட்டியுள்ளது.

மஹிந்த அரசாங்கம் சீனாவின் முதலீட்டுடன் கொழும்புத் துறைமுக நகரம் அமைப்ப தற்கு முற்பட்டமையை ஐக்கிய தேசியக் கட்சி சாதகமாகப் பயன்படுத்தி மஹிந்தவைத் துரத்தி ஆட்சியைக் கைபற்றிக்கொண்டது. இப்போது அம்பாந்தோட்டை துறைமுக பிரதேசத்தோடு உள்ள நிலத்தை ரணில் அரசாங்கம் சீனாவின் முதலீட்டு வலயத்துக்கு கொடுக்க முயல்வதை மஹிந்த ராஜபக்ஸாவும் அவரோடு கூட்டணி அமைத்திருப்பவர்களும் இப்போதைய அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் திரட்டுவதற்கான தமது வாய்ப்பாகக் கருதி செயற்பட்டு வருகின்றனர்.

அம்பாந்தோட்டையில் 15000 ஏக்கர் நிலமல்ல 1200 ஏக்கர் நிலம் மட்டுமே சீனாவின் முதலீட்டு வலயத்துக்காக வழங்கப்பட உள்ளது என அரசாங்க அமைச்சர்கள் சிலர் கூறுகின்றனர். அது தொடர்பாகவும் அரசாங்கம் இப்போது சீனாவுடன் ஒப்பந்தம் செய்வதில் நெருக்கடிநிலை தோன்றியுள்ளது. இது தொடர்பாக கூறும் சீன இராஜங்க அதிகாரி ஒருவர், அம்பாந்தோட்டையில் மட்டுமல்லாது, இலங்கையில் வெவ்வேறு இடங்களில் தாங் கள் பொருளாதார முதலீட்டு வலயங்களை அமைப்பதற்கு மொத்தமாக 15000 ஏக்கர் நிலங்களைக் கேட்டுள்ளதாகக் கூறுகிறார்.

அம்பாந்தோட்டையில் சீனாவின் முதலீட்டு வலயம் ஏற்படுத்த முடியாவிட்டால், அதற்கு மாற்றாக பொலநறுவையில் பொருளாதார அபிவிருத்தி வலயம் ஒன்றை அமைக்கும்படி ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளார். இந்தியாவின் அனல் மின் நிலையம் சம்பூரில் அமைக் கப்படுவதற்கு எதிர்ப்பு ஏற்பட்டதால் அதனை கெரவலப்பிட்டியாவில் அமைப்பதற்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்தார். அதேபோல இப்போது அம்பாந்தோட்டையில் சீன முதலீட்டு வலயம் அமைப்பதற்கு எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதால் அதனை பொலனறுவைக்கு மாற்றுவதற்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்கிறார் போல தெரிகின்றது. வெளிநாடுகளின் முதலீடுகள் இடம்மாறுமே தவிர. அவை கைவிடப்படாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றமை தெளிவாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர் அமைப்பின் மீது அடேல் பாலசிங்கத்தின் கடும் கண்டனத்திற்கு காரணம் என்ன ?

*வி.விக்கினேஸ்வரன்* *கொடிகாமம்*

**கேள்வி: எல்.ரீ.ரீ.ஈ.யின் அரசியல் கொள்கை வகுப்பாளராகக் கருதப்பட்டவரும், அவர் இயற்கை மரணம் எய்தியபோது 'தேசத்தின் குரல்' என்று பிரபாகரனால் பட்டமளிக்கப்பட்டவருமான மறைந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மனைவி அடேல் பாலசிங்கம், லண்டனிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ சார்பான புலம்பெயர் தமிழ் அமைப்பு ஒன்றின் மீது கடுமையான கண்டனம் தெரிவித்திருந்தாராமே? என்ன நடந்தது?**



பதில்: செத்த பாம்பை கழுத்தில் மாட்டிக் கொண்டு வித்தை காட்டிப் பிழைக்கும் கூத்தாடிகளுக்கு இணையாகச் செயற்பட்டு வரும் சில புலிகள் சார்பு குழுக்களில் ஒன்றுதான் 'தமிழர் பாரம்பரிய மையம்' என்ற அமைப்பு. இந்த அமைப்பில் உள்ளவர்கள் பாம்பு உயிருடன் இருக்கும்போதும் பாம்பைக்காட்டி பெரும் பணம் சேர்த்தவர்கள். சமீபத்தில் இவர்கள் இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போ:ர்ட் என்னும் இடத்தில் பல ஏக்கர் நிலத்தை வாங்கியும், அந்த இடத்தில் மறைந்த பேராளிகளின் நினைவாகக் கல்லறைகள் நிறுவப் போவதாகவும் கூறி வருகின்றனர். ஈழ மண்ணில் பல்லாயிரம் முன்னாள் போராளிகளும், குடும்பத்தினரும் வாழ வழியின்றிப் பரிதவிக்கும் நிலையில் இவர்களது இச்செயல், பாம்பு செத்தாலும் அதனை வைத்துக் கொண்டு தமது பிழைப்பைத் தொடரவும், 'ஈழவிடுதலைக்கான இறுதிப் போர்' என்று கூறிச் சேர்த்துத் தம் வசம் தக்க வைத்துக் கொண்ட கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றவும், அவற்றைக் கொடுத்தவர்கள் பணத்தைத் திருப்பிக் கேட்கும் தொல்லைகளைத் தவிர்க்கவும், அந்தப் பணத்தின் மூலம் தங்கள் சுக போகங்களையும் சமூகப் பிரபல்யத்தையும் தொடரவும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்காகத் தாங்கள் ஏதோ பெரிதாகச் சாதித்தது போல் காட்டிவிட வேண்டியும் முன்னெடுக்கப்படும் ஒரு தேவையற்ற, நேர்மையற்ற செயலாகப் பேசப்படுகிறது.

சென்ற மாதம், இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் லண்டனில் தகனம் செய்யப்பட்ட மறைந்த அன்ரன் பாலசிங்கத்தின் சாம்பலைக் கொண்ட கலசம் தங்களின் கைவசம் இருப்பதாகவும், அவரின் ஞாபகார்த்தமாக -அவர் மறைந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர்- அதனை அவர்கள் வாங்கிய காணியில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் நிறுவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிக்கை விட்டிருந்தனர்.

இதனை அறிந்த அவரது மனைவி அடேல் பாலசிங்கம், தனது கணவனின் அஸ்தி முழுவதையும் தனது கணவர் வாழும் பொழுது அவர் தனக்குத் தெரிவித்த விருப்பின் பிரகாரம், இயற்கையுடன் நீரிலும் நிலத்திலும் சேர்த்தாகி விட்டது என்றும், அந்த அமைப்பினர் தங்களிடம் அந்தச் சாம்பல் இருப்பதாகக் கூறுவது முற்றாகப் பொய்யானது என்றும் ஒரு மறுப்பு அறிக்கை விட்டிருந்தார். மேலும், அப்பாவிப் பொதுமக்களை ஈர்ப்பதற்காக நாகரிகமற்ற வழிகளில் பணம் செலவழித்து வெறும் கல்கட்டிடம் அமைப்பதற்குப் பதிலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தப் பணத்தை வழங்கினால் அது ஒரு கௌரவமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உதவியாக இருக்கும் எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

தம்மிடம் அஸ்தி இருப்பதாகக் கூறியவர்கள், அடேல் பாலசிங்கத்திற்கு நடந்தவை ஒன்றும் தெரியாது என்றும், அவர் ஒரு துரோகியாகி விட்டார் என்ற பொருள்பட மற்றைய தரப்பினரின் (அவர்களும் தாங்கள் தான் உண்மையான புலிகள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள்தான்) சூழ்ச்சிகளுக்கு சோரம் போய்விட்டார் என்று பதிலளித்திருந்தார்கள்.

எப்படியிருக்கிறது இந்த நாடகங்கள் பாருங்கள்!. 'புலிகளின் பெண் போராளிகளுடன் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்' என புலிகளின் காலத்தில் போற்றித் துதிபாடப்பட்ட அடேல் பாலசிங்கம் அவர்கள், தமது கூத்துக்களுக்குத் தாளம் போடவில்லை என்ற காரணத்தால், இப்பொழுது எதிரியாகி விட்டார் 'துரோகி' பட்டம் சூட்டப்பட்டுவிட்டார்!.

தம்மைத்தாமே தமிழர்களின் தலைவர்கள் எனும் கூத்தாடிகளின் கொக்கரிப்பு:-

அதோ பாருங்கள்
கட்டுகிறோம்
நாளை மலரப் போகும்
நாடாம் ஈழத்திற்கு
இன்னுயிர் ஈந்த
இளம் வீரர்களின்
பளிங்குக் கல்லறைகள்!

சிந்திக்கும் சில மக்கள் சொல்கிறார்கள் :-

இல்லை! இல்லை!
உங்கள் பதவிப் பாதைக்கு - அவை
உங்களால் பதிக்கப்படும் பளிங்குப் படிக்கற்கள்!

பல்லாயிரம் பிணங்கள் படிக்கற்கள் ஆகின்றன!
சில்லறைகள் சிலர் சிம்மாசனம் ஏறுவதற்கு!




*தி.யோகநாதன்* *மட்டக்களப்பு*

**கேள்வி: "வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லாத, 'ஒற்றை ஆட்சி' என்ற பதம் இல்லாத, 'சமஷ்டி' என்ற பதத்தை உள்ளடக்காத, புத்த சமயத்திற்கு முன்னுரிமை அளிப்பதான எந்தவொரு அரசியல் அமைப்பையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று முழக்கங்கள் செய்பவர்களையும், எழுதுபவர்களையும், அறிக்கைகளை அவ்வப்போது விட்டுக் கொண்டிருப்பவர்களையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: ஓர் உண்மையைச் சொல்கிறேன் :- தமிழன் என்ற வகையில் 'தமிழீழம்' கிடைக்கும் என்றால் நான் "வேண்டாம்" என்று சொல்லப்போவதில்லை!. கிடைத்தால் மாபெரும் மகிழ்ச்சி அடைவேன். ஆனந்தக் கூத்தாடுவேன். அதனைப் பெற்றுத் தந்த தமிழ்த் தலைவர்களை மகிழ்ச்சிப் பெருக்கால் கட்டி அணைத்திடுவேன். எனது வாழ்நாள் வரை அவர்களுக்கு என்னால் முடிந்தளவு சேவகம் செய்திடுவேன்!. 'தமிழீழம்' என்றில்லாவிட்டாலும், இன்றைய நிலையில், வடக்கு-கிழக்கு இணைப்புடன், 'ஒற்றை ஆட்சி' என்ற பதம் இல்லாது 'சமஷ்டி' என்ற பதத்தை உள்ளடக்கிய, எந்தவொரு மதத்துக்கும் முன்னுரிமை அளிக்காத புதிய அரசியல் அமைப்பொன்று கிடைக்கும் என்றாலும் நான் "வேண்டாம்" என்று சொல்லப் போவதில்லை. அத்தகைய அம்சங்களை நேரடியாக உள்ளடக்கிய அரசியலமைப்பைப் பெற்றுத் தரும் தமிழ்த் தலைவர்களையும் அனுதினமும் போற்றித் துதி பாடிடுவேன்!.

ஆனால், கூத்தாடிக் கூத்தாடியும், ஆளாளுக்காள் சன்னதமாடியும், 'ஏகப்பிரதிநிதித்துவம்' பேசியும் மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டமாக இருக்க வேண்டியதை - தொடர வேண்டியதை, ஆயுதம் தாங்கிய பலவான்களின் 'சண்டித்தனத்துக்கான களமாக' மாற்றி, குறுக்கியதால் விளைவு முள்ளிவாய்க்காலில் மூன்று இலட்சம் தமிழர்கள் இலங்கை அரச படைகளின் முன்னால் முழங்காலில் தலை குனிய இருத்தப்பட்டார்கள்,

தறுதலைத் தனமாக தலையெடுத்தாடினால் இனித் தமிழர்களின் நிலை மேலும் அதல பாதாளத்தில் விழும் என்ற இன்றைய நிலையில், ஒரு புதிய அரசியலமைப்பை தமிழர்கள் ஜனநாயக ரீதியில்தான் பெற முடியும், அதுவும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளின் ஒப்புதலுடனும், நாடு தழுவிய சர்வசன வாக்கெடுப்பின் அங்கீகாரத்தின் மூலமுமாகத்தான் நிறுவப்பட முடியும் - அமுலாக்கப்பட முடியும் என்ற நிலையே உள்ளது.

இந்த நிலையிலும் வீறாப்பாக வீரவசனங்கள் பேசுகின்ற தமிழ்த்தலைவர் எவரும் அவர்களின் கற்பனா வாக்குறுதிகளை எப்படி நடைமுறையாக்குவார்கள் என்பதை நம்பும் விதமாக திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. அவர்களின் அறிக்கைகளும் முயற்சிகளும், தொண்டை கிழியக் கத்துவதுவும் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவே என்னும் நிலையே உள்ளது. நடைமுறைச் சாத்தியம் அற்ற அரசியற் சுலோகங்களை முழங்கும் இவர்கள், போதாததற்கு அடிக்கடி 'சர்வதேசம்' தங்களோடு நிற்பதாகவும், அவற்றின் துணையோடு "தமிழர்கடைய தாயகத்தின் சுயநிர்ணய உரிமையை" வென்றெடுக்கப் போவதாகவும் சளைக்காமல் 'ரீல்' விடுகிறார்கள்! தமிழ் மக்களைப் படு முட்டாள்களாகக் கருதிச் செயற்படும் இவர்கள் கிஞ்சித்தும் நேர்மையற்ற பாசாங்குக்காரர்கள். இவர்களைத் தலைவர்களாக தமிழர்கள் நம்பும் வரை தமிழர்களுக்கு விடிவில்லை.

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

## அலங்கா நல்லூர் ஆடும் வரை ஈழ நல்லூர் அடங்காது




ஜல்லிக்கட்டு நடாத்த விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணம் நல்லூரில் 18.01.2017 நடைபெற்ற கவனஈர்ப்பில் கோசம்

1960 களின் நடுப்பகுதியின் பின் தமிழக இளைய தலைமுறையின் காந்திய வழி எழுச்சி நம்பிக்கை தருகிறது. பண்பாட்டு உரிமைகளுக்கு அப்பால் இது காப்பிரேட் உலகம் தொடர்பான கேள்வியை எழுப்புகிறது.

இது தமிழக அளவில் நிகழ்ந்தவுடன் இதற்கு அகண்ட தமிழ் அர்த்தம் கொடுப்பது சரியாக இருக்காது

காப்பிரேட்டுகளின் சூறையாடலுக்கெதிரான போராட்டம் மனிதகுலத்தின் பெருவாரியான வெகுஜனங்களால் தத்தமது சமூக பண்பாட்டு அடையாளாங்களுடன் அல்லது உலகு தழுவிய வர்க்க உணர்வுடனும் முன்னெடுக்கப்படுகிறது.

முகநூல் பதிவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் ஜோர்ச்
திருகோணமலை

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை,
நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் கணேஸ்
கல்லாறு

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| பூ. கதிரேசன் | கணேஸ் | 02.01.1989 | சுண்ணாகம் |
| ப. ஞானச்சந்திரன் | குரு | 05.01.1990 | சாவகச்சேரி |
| சி. செல்வரட்ணம் | சதீஸ் | 05.01.1990 | கிளிநொச்சி |
| இரா. தனராஜ் | ரவி | 05.01.1990 | கிளிநொச்சி |
| ஜோ. சுரேஸ்குமார் | சதீஸ் | 07.01.199 | நெடுந்தீவு |
| | சீனு | 07.01.1990 | கச்சாய் |
| கி.பாலசுப்பிரமணியம் | இராசா | 09.01.1990 | பளை |
| | காளி | 10.01.1990 | அச்சுவெலி |
| ரா. அரசரட்ணம் | | 13.01.1989 | கிளிநொச்சி |
| பெ. குணசேகரம் | தயாளன் | 14.01.1990 | கண்டி |
| சு. லோகதாசன் | காதர் | 14.01.1990 | டிக்கோயா |
| | பிள்ளையார் | 20.01.1989 | கரவெட்டி |
| | அலிஸ்ரன் | 20.01.1990 | அல்லைப்பிட்டி |
| தியாகு | ஜெஸ்லி | 20.01.1990 | நாரந்தனை |
| | காந்தன் | 20.01.1990 | ஊர்காவற்றுறை |
| சி. கிருபராசா | கிருபா | 20.01.1990 | புங்குடுதீவு |
| ப. யோகநாதன் | லெனின் | 28.01.1988 | நெடுந்தீவு |
| குமாரநாதன் | தர்மன் | 28.01.1988 | நெடுந்தீவு |
| வை. கிபுலர் | | 23.01.1987 | களுவாஞ்சிக்குடி |
| மு. திருநாவுக்கரசு | அல்பேட் | 04.01.1987 | காரைதீவு |
| ஆ. ரஞ்சன் | விக்கி | 04.01.1987 | ஆரையம்பதி |
| என். பேரின்பம் | | 05.01.1987 | மண்டூர் |
| எஸ். கணேசமூர்த்தி | கணேஸ் | 09.01.1990 | கல்லாறு |
| கே. சிவாநந்தம் | சிவா | 12.01.1990 | கல்லாறு |
| V. சிங்கன் | ஜுலி | 12.01.1990 | தாண்டியடி |
| எஸ். பற்குணம் | பற்குணம் | 19.01.1987 | மண்டூர் |
| | லோகு | 19.01.1985 | துறைநீலாவணி |
| V. சபாரட்ணம் | அலெக்ஸ் | 20.01.1986 | மகிழுர் |
| E. நேசதுரை | சுமன் | 20.01.1989 | வாக்கெல |
| சர்வாநந்தன் | ஆனந்தன் | 20.01.1989 | வாக்கெல |
| ராஜன் | பாரதி | 28.01.1998 | களுதாவளை |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| த. தவராஜா | ஜோர்ஜ் | 10.01.1990 | திருகோணமலை |
| ந. உதயகுமார் | தருமன் | 10.01.1990 | திருகோணமலை |
| S. சண்முகராஜா | சுமன் | 10.01.1990 | ஈச்சிலம்பத்தை |
| பன்னீர்செல்வம் | கரன் | 10.01.1990 | கும்புறுபிட்டி |
| தருமலிங்கம் | சுதா | 10.01.1990 | ஈச்சிலம்பத்தை |
| | பாபு | 01.01.1990 | செட்டிகுளம் |
| | ராம் | 09.01.1990 | வவுனியா |
| | நடா | 23.01.1989 | வவுனியா |
| சரவணா | மதன் | 23.01.1989 | மலையகம் |
| கொலின் | கொலின் | 23.01.1990 | |
| | கபில் | 23.01.1990 | முருங்கன் |



தோழர் குரு
சாவகச்சேரி



தோழர் தருமன்
நெடுந்தீவு



தோழர் சுதா
திருகோணமலை

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று ஜனவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்களில், எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்த பங்களிப்புச் செய்வதுடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய, தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் 50 வது ஆண்டு

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் 50 வது ஆண்டு நிகழ்வு யாழ் றிம்மர் மண்டபத்தில் கடந்த ஆண்டு இறுதியில் நிகழ்ந்தது. பெருந்தொகையான சமூக ஆர்வலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் திரு சி.க.செந்தில்வேல், சோ.தேவராசா, திரு. தணிகாசலம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வு சம்பந்தமான செய்திகள் யாழ் ஊடகங்கள் என்று சொல்லப்படுபவற்றில் அநேகமாக இடம் பெறவில்லை என்றே கூற வேண்டும்.

மகாசபை சமூக அநீதிக்குட்பட்ட மக்களின் குரலாக 50 ஆண்டுகளுக்கு முன் எழுச்சியுற்றது. புழுதியாக மிதிக்கப்பட்ட மக்களின் போர்க்குரலாக அது எழுந்தது. தீண்டாமைக்கெதிரான ஆலயப் பிரவேசம். தேனீர்கடை பிரவேசம் போன்ற போராட்டங்களின் ஊடாக அந்த இயக்கம் மேலெழுந்தது, யாழ் குடாநாட்டின் ஒடுக்கப்படட மக்களின் குரலாக ஒலித்தது.

ஆதிக்க சாதியினரின் ஒடுக்குமுறைக்கு எதிராக அது ஒரு ஜனநாயக புரட்சி இயக்கமாக உருவானது. இப்படியான இயக்கங்கள் இருந்தது பொருங்கதையாடலான தமிழர் வரலாறு பதிவு செய்வதில்லை. யாழ் குடாநாட்டு வாழ்வியலை ஜனநாயகப் படுத்துவதில் மனிதரை மனிதர் மதிக்கும் மாண்பை உருவாக்குவதில் இந்த இயக்கம் குிறப்பிட தகுந்த பங்களைப்பை வழங்கியது. தோழர்கள் கார்த்திகேயன், கே.ஏ சுப்பிரமணியம், வீ.ஏ கந்தசாமி, எஸ்.ரி.என். நாகரட்ணம் தங்கவடிவேல் மாஸ்ரர் போன்றவர்கள் இதன் முன்னோடிகளாக இருந்தார்கள்

இதற்கு முன்னர் ஐம்பதுகளில் சிறுபான்மை தமிழர் மகாசபை உருவாக்கம் நிகழ்ந்தது. இதில் தோழர்கள் எம்.சி.சுப்பிரமணியம், தோழர் பொன் கந்தையா போன்றவர்களின் பங்களிப்பு பதிவு செய்யப்பட வேண்டியதாகும்.

1930 களில் முற்பகுதியில் ஹன்டி பேரின்பநாயகம் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட இளைஞர் காங்கிரஸ் இலங்கையின் சுதந்திரத்திற்காகவும் சமூக சீர்திருத்தத்திற்குமான இயக்கங்களை முன்னெடுத்திருந்தது.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்டட் கட்சி, -கம்யூனிஸ்ட் கட்சி பிளவு பட்டபோது இரண்டு தரப்பும்-இந்த இயக்கங்களை முன்னெடுத்ப்பதில் உறு துணையாக நின்றன.

சமூக நீதிக்கான செயற்பாடுகள் அன்றைய தமிழ் தேசியத்தின் நிகழச்சி நிரரில் இல்லத விடயமாக இருந்தது,

ஆனால், வடபகுதி இடதுசாாரிகளே சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு போராடினாார்கள் வரலாறு வெற்றிடத்தை விடுவதில்லை அதற்கு 1960 களின் நடுப்பகுதியில் உருவான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் உருவாக்கம் சாட்சி

இந்த ஜனநாயக புரட்சி கடமைகள் இன்னும் எமது சமூகத்தில் பூர்த்திசெய்யப்படவில்லை. தீண்டாமையும் பெண்ணடிமைத்தனமும் நீறு பூத்த நெருப்பாகவும் பகிரங்கமாகவும் தமிழ் சமூகத்தில் நிலவுகின்றன.

எனவே, இத்தகைய இயக்கங்களின் பங்களிப்பு தொடார்ச்சியாக நிகழ வேண்டும்.

ஆதிக்க ஊடகங்கள், அரசியல் இவற்றை அனுமதிக்க மாட்டா எதிராகவே செயற்படும். இவற்றையெல்லாம் மீறி சமூக நீதிக்கான பணி தொடர வேண்டும். தமிழர்கள் மத்தியிலான ஜனநாயக புரட்சி கடமைகள் பூர்த்தி செய்யப்படாமல் ஒட்டுமொத்த தமிழர்களின் சுதந்திரம் என்பது ஒரு மோசடியே

இலக்கிய ஆழுமைகள் டொமினிக் ஜீவா, டானியல், தெணியான் போன்றவர்கள் வாழ்வியல் அனுபவங்களினூடாக இதனை பதிவு செய்தார்கள்

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் வரலாற்றுப் பாத்திரம் விரிவாக பதிவுசெய்யப்படவும் முன்னெடுக்கப்படவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை மொழிகளை அள்ளி வழங்கினார்

- வன்முறைகள் நிறுத்தப்பட்டு விட்டன.
- இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுகின்றன.
- ஜனாதிபதி. பிரதமர். எதிர்க்கட்சித் தலைவர் நாட்டு நிலமையை நன்கு அறிவர்.
- எமது வாழ்நாளில் கிடைக்காத அரிய வாய்ப்பை மிக சாதாரணமாக உதறிவிட முடியாது.
- ஐக்கிய தேசியக் கட்சி. சிறீலங்கா சுதந்திரக் கட்சி. தமிழர் தேசிய கூட்டமைப்பு. முஸ்லீம் கட்சிகள் பிரச்சனைக்கான அடிப்படைக் காரணிகளைக் களைய ஒத்துழைக்கத் தயாராக உள்ளன.
- கடந்த காலத் தவறுகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுள்ளோம்.
- ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை எட்டுதவதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.



2017ம் ஆண்டின் நுழை வாயிலில் நிற்கும் நாம் 'நல்லாட்சி' என்ற பெயரில் இயங்கும் இலங்கை அரசு கடந்த இரண்டு வருடங்களில் எட்டிய சாதனைகளை இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க 'சத்தாம் இல்லம்' ( Chatham House ) மண்டபத்தில் இடம்பெற்ற சிறப்பு வைபவத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐரோப்பிய நாடுகள் பல தீவிர தேசியவாதத்திற்குள் சிக்கி ஜனநாயக நிறுவனங்களை கேள்விக்குட்படுத்தியுள்ள காலகட்டம் இது. இவ் வேளையில் இலங்கையிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது. இப்பின்னணியில் அமைச்சர் வழங்கிய நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் யாரையாவது திருப்திப்படுத்தினவா? என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

இலங்கை அரசு இந்த ஆண்டு ஜனவரி 8ம் திகதி முதல் 14ம் திகதி வரையான காலப்பகுதியை தேசிய ஒருங்கிணைப்பு. நல்லிணக்கத்திற்கான வாரமாக அறிவித்துள்ளதாக கூறி தனது உரையை ஆரம்பித்த அமைச்சர் இலங்கை அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக இவ்வாறான வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஜனவரி 9ம் திகதி பாடசாலைகள். பாராளுமன்றம் உட்பட அரச நிறுவனங்கள் எங்கும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த ஒத்துழைக்கும் வாசகங்களைப் படிப்பதோடு. பன்முகத் தன்மை கொண்ட நாட்டின் சமாதானத்திற்காகவும். பரஸ்பர நம்பிக்கைளை வளர்ப்பதற்காகவும். சகோதரத்துவத்தைப் பேணுவதற்காகவும் இணைந்து செயற்படுவதெனவும். அதன் மூலம் புதிய ஐக்கிய இலங்கையை உருவாக்க உழைப்பதாகவும் சபதமெடுப்பார்கள் என்றார்.

இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள ஆட்சியில் தாம் எதிர் நோக்கியுள்ள சவால்களை கூறும்போது. 2009ம் ஆண்டு மே மாதம் வன்முறை முடிவடைந்த நிலையில் இரண்டு தசாப்தத்திற்கு மேலான காலப்பகுதியில் ஏற்பட்ட காயங்களை ஆற்றி தேசிய ஒருங்கிணைப்பு. நல்லிணக்கம். பொருளாதார முன்னேற்றத்தினை எட்டிப்பிடித்தல். மீளவும் பிரச்சனைகள் எழாது தடுத்தல் என்பன நாடு எதிர்நோக்கும் சவால்கள் என்றார்.

அரச நிறுவனங்களின் தரத்தினை உயர்த்துதல். சட்டப்படியான ஆட்சி. தனி மனித உரிமைகளைப் பேணுதலும். வளர்த்தலும். தேசத்தின் பன்மைத் தன்மை மாறாத வகையில் சகலருக்கும் பொதுவான அடையாளங்களை வளர்த்தல் என்பது தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி இலங்கை மக்கள் ஏகோபித்த அளவில் சர்வாதிகார. ஊழல் நிறைந்த. வெறுப்புகளை ஊக்குவிக்கும் அரசியலை நிராகரித்தார்கள். ஜனநாயகம். தேசிய நல்லிணக்கம். சட்டப்படியான ஆட்சி. நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி புதிய அரசை உருவாக்கினார்கள்.

தைரியம் நிறைந்த இலங்கையர்கள் நாட்டின் வரலாற்றில் முதற் தடவையாக பிரதான அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தேசிய ஐக்கிய அரசை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த அரசு

- ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரு தடவைகளாக மாற்றினார்கள்.
- ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை 6 ஆண்டு களிலிருந்து 5 ஆண்டுகளாக குறைத்தார்கள்.
- அரசியல் அமைப்பு சபை உருவாக்கம். சுயாதீன ஆணைக் குழுக்கள். தகவல் அறியும் உரிமை போன்றன அரசியல் அமைப்பின் 19வது திருத்த மூலம் சாத்தியமாகின.




இரண்டு ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்ட அமைச்சர் போர்க் குற்றம் தொடர்பான விசாரணைகள் குறித்து அளித்த பதில் புலம்பெயர் தமிழ் மக்களை அல்லது தாயக மக்களைத் திருப்திப்படுத்தியிருக்கும் என நான் நம்பவில்லை.

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்தல் குறித்து பல்வேறு வகைப்பட்ட அபிப்பிராயங்கள் இருப்பதாக தெரிவித்த அவர். ஜனாதிபதி தேர்தலின்போது வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டவாறு சுயாதீனமான. நம்பகமான நீதிபதிகளை நியமித்தல் என்பதில் பொது அபிப்பிராயம் இருப்பதாக தெரிவித்தார். இறைமையுள்ள உள்நாட்டு அரசு என்ற வகையில் சகல பங்குதாரர்களின் ஒப்புதலுடன் அவ்வாறான ஒரு பொறிமுறையை வரைய முடியும் என்றார்.

வெளிநாட்டமைச்சரின் கவனம் மேற்குலக அரசுகளைத் திருப்திப்படுத்தி கடனுதவிகளைப் பெறுவதற்கான. ஐரோப்பிய சந்தைகளில் இலங்கை ஏற்றுமதிகளுக்கு சலுகை வசதிகளைப் பெற எடுத்த ஓர் முயற்சியாகவே அவை காணப்பட்டன. போரினால் சரீரரீதியாக பாதிக்கப்பட்டோர். தமது நிலங்ளை இழந்து நிற்போர். குடும்பச் சுமைகளைத் தாங்கி நிற்கும் பெண் சமூகம். பொருளாதாரச் சுமைகள். வேலையில்லாத் திண்டாட்டம். மேலும் கல்வி. சுகாதாரம் போன்றவை தொடர்பாக எதிர்காலச் சந்ததிக்கான உத்தரவாதங்கள் ஆகியவற்றின் மீது அரசு மேற்கொள்ளும் பணிகள் பற்றி அமைச்சரினால் எதுவுமே கூறப்படவில்லை. ஏனெனில் உள்நாட்டிலுள்ள நிலமைகள் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு திருப்திகரமாக இல்லை. தீவிர சிங்கள இனவாத அரசியலின் வளர்ச்சியும். அவற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசின் இயலாத் தன்மையும் சிறுபான்மை இன மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

புலம்பெயர் தமிழர்களே மேற்குலக அரசுகளுக்கு பிரச்சனைகளின் மறு. பக்கங்களை எடுத்துரைப்பதில் நெருக்கமாக இருக்கின்ற நிலையில் அமைச்சர் மங்கள சமரவீர அவர்களின் லண்டன் உரை எவ்வளவு தூரம் நம்பிக்கை அளிக்கும் விதமாக அமைந்துள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய பிரித்தானியா ஐரோப்பிய பொதுச் சந்தையில் அங்கமாக தொடரும்?

பிரித்தானிய அரசு மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக் குள் தள்ளப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் பிரித்தானியா, ஐரோப்பிய சந்தையில் தொடர்ந்து இருப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் பொருளாதார நெருக் கடிகள், அகதிகள் பிரச்சினை, பொருளாதாரக் காரணிகள் காரணமாக இடம்பெயரும் கிழக்கு ஐரோப்பியர்கள் பிரச்சினை போன்றன தீவிர வலதுசாரி சக்திகளுக்கு வலுவூட்டியுள்ளன. தேர்தலை எதிர்நோக்கியுள்ள பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சிகளைக் கைப்பற்றலாம் என்ற கணிப்புகள் உள்ளன. அவ்வாறாக ஆட்சி மாற்றங்கள் நிகழுமானால் ஐரோப்பாவில் ஜனநாயகம் தோற்றுவிடலாம் என்ற அச்சங்களும் எழுந்துள்ளன.

பிரித்தானிய மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற எடுத்த முடிவின் பின்னால் பிரித்தானிய தேசியவாதம் தீவிரமாக செயற்பட்டதைப் பலரும் அறிவர். தற்போது அமெரிக்காவிலும் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், அதன் பின்னால் உள்ள அமெரிக்க தேசியவாதமும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தங்கியுள்ள சீனா. இந்தியா. பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் சரிவுகளை ஏற்படுத்தலாம் என்ற எச்சரிக்கைகளும் எழுந்துள்ளன.

## நெதர்லாந்து நாட்டின் எச்சரிக்கை

இதன் பின்னணியில், பிரித்தானியா ஐரோப்பிய பொருளாதார சந்தையுடன் இணையும் அதேவேளை பல பொருளாதார ஒப்பந்தங்களைத் தனித்தனி நாடுகளுடன் வெவ்வேறு சலுகைகளைக் காட்டி மேற்கொள்ள முயற்சித்து வருகிறது. பிரித்தானியாவின் இந்த முயற்சிகளைத் தாம் தடுக்கப்போவதாக நெதர்லாந்தின் உதவிப் பிரதமர் தெரிவித்துள்ளார். நெதர்லாந்து தொழிற் கட்சியின் தலைவரான அவர். வரிகளைச் செலுத்தாமல் செயற்படும் பாரிய பல்தேசிய நிறுவனங்களின் இருப்பிடமாக அல்லது குறைந்த வரி விதிக்கும் பொருளாதாரமாக பிரித்தானியாவை மாற்ற எடுக்கும் முயற்சிகள். தமது சமூக பொருளாதார பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சீர்குலைத்துவிடும் என்றும். அதனால் சமூக செலவினங்களை சாமான்ய மக்களே சுமக்கும் நிலை ஏற்படலாம் என்றும் எச்சரிக்கிறார்.

பிரித்தானியாவினதும். ஏனைய 27 ஐரோப்பிய நாடுகளினதும் நன்மை கருதி. பிரித்தானிய பிரதமர் திரேசா மே யின் அரசாங்கம் பிரித்தானியாவை குறைந்த வரி விதிக்கும் நாடாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும் என்றார்.

வெளிநாட்டவர்களுக்கு எதிராக எழுப்பப்படும் வெறித்தன அரசியலை நிறுத்த வேண்டுமெனில் முற்போக்கு தேசியவாதம் பலப்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்த அவர். குடியேற்றம் தொடர்பாக ஐரோப்பிய சட்டங்களில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும். தொழிலாளர்களின் சம்பளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் போக்குகள் தொழிலாளர் மத்தியில் சமச் சீரற்ற போட்டிகளை ஏற்படுத்தும் எனவும். குடிவரவு சமூககங்களிடையேயும். உள்நாட்டிலும் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

முற்போக்குத் தேசியவாதம் என்பது தேசியவாதிகளுக்கும். வெறித்தன அரசியலை நடத்துபவர்களுக்கும் வழங்கப்படும் மாற்று மருந்து மட்டுமல்ல அது தேசிய அடையாளம் குறித்து எழுப்பப்படும் சந்தேகங்களுக்கும் பதிலாக அமையும். குடிவரவு குறித்து இடதுசாரிகள் மத்தியில் பரந்த சிந்தனை அவசியம் எனத் தெரிவித்த அவர் ஐரோப்பாவில் காணப்படும் சமூக அநீதி கடந்த பல காலங்களாக எழுப்பிய சமாதானத்தையும். கூட்டினையும் சீர்குலைத்துவிடும் என்பதால் புதிய. நியாயமான முற்போக்கான சட்டங்கள் அவசியமாகின்றன என்றார்.

இலங்கையில் வாழும் தேசிய சிறுபான்மை இனங்களை பெரும்பான்மையினர் என்ற காரணத்தினால் நடத்தும் வெறித்தனமான அரசியலின் கோரமுகங்கள் ஐரோப்பாவில் பரந்து காணப்படுவதும். இவை மிக நீண்டகாலமாக போராடிப் பெற்ற மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைக்க ஜனநாயக நிறுவனங்களைக் குறுக்கு வழியில் கைப்பற்றிச் சிதைக்க எண்ணுவதும் இன்றைய பிரச்சனைகளாக. முக்கிய விவாதங்களாக எழுந்துள்ளன.

இடதுசாரிகள் இப்பிரச்சனைகளில் முற்போக்குத் தேசியவாதத் தினை முன்னெடுத்தலின் அவசியத்தை ஐரோப்பிய அரசியல் எமக்கு உணர்த்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லன கிடைக்கையில் நிராகரிக்கும் தமிழர்களின் சிந்தனை பின்னர் - நனவாக முடியாத கனவுகளுடன் தடுமாறுகிறது

இப்பொழுது ஆட்சியில் உள்ள மைத்திரி- ரணில் கூட்டு அரசாங்கம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைத் தந்தாலும் அது 2000 ஆம் ஆண்டு சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக இருந்த பொழுது முன்வைத்த தீர்வுத்திட்டம் போன்று கிடைக்காது என அமைச்சர் மனோ கணேசன் கூறுகின்றார்.

இப்பொழுது உள்ள அரசின் புதிய அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பாக தமிழ் மக்கள்தான் ஒப்பாரி வைக்க வேண்டும் என திரு.மனோ கணேசன் கூறியுள்ளார். 2000 ஆம் ஆண்டு திருமதி சந்திரிகா அவர்கள் ஒரு நியாயமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைத்த போது அத்திட்ட நகலை ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி யினரும் சிஹல உறுமயக்காரர்களும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயே வைத்து எரித்தனர். பாராளுமன்றத்திற்கு வெளியே நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் உட்பட பல்லாயிரக்கணக்கான சிங்கள இனவாதிகளும் சேர்ந்து அந்த அரசியல் யாப்பு திட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சிங்களக் கட்சிகளும் சிங்கள இனவாதிகளும் மட்டுமல்ல. சந்திரிகா அவர்கள் முன்வைத்த அரசியல் தீர்வுத்திட்டத்தை. அது "தமிழர்களுக்கு போதாது". அது "தமிழர்களின் அபிலாசைகளுக்கு விரோதமானது" என்று கூறியபடி இரா.சம்பந்தர் உட்பட இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருப்பவர்களும் சந்திரிகா அவர்களின் தீர்வுத்திட்டத்தை எதிர்த்தவர்களே.- நடைமுறைக்கு வர முடியாதபடி செய்தவர்களே. இன்று அமைச்சராக இருக்கும் மனோ கனேசனும் அன்று ஐக்கிய தேசிய கட்சியின் பங்காளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அடுத்து உருவாக்கப்பட்ட 13வது அரசியல் யாப்பு திருத்தத்தின்படி வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையை அமைத்தபோது இந்த இரா.சம்பந்தர் உட்பட இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருப்பவர்களும் அதனை இல்லாது செய்வதற்காக முழு முயற்சி எடுத்தவர்களே.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணசபை இருந்த காலத்திலெல்லாம் சம்பந்தரும் அவரது தலைமையில் த.தே.கூட்டமைப்பாக இருப்பவர்களும் அதனை நிராகரித்து -எதிர்த்து வந்தார்கள் என்பது பகிரங்க உண்மை. அந்த வடக்கு-கிழக்கு மாகாணசபை வடக்கு மாகாணசபை. கிழக்கு மாகாண சபை என பிரிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் அப்பதவிகளில் ஒட்டிக் கொண்டு அதனால் கிடைக்கும் சுகபோகங்களையும் சலுகைகளையும் அனுபவிப்பதில் முழுமூச்சாக இருக்கின்றார்கள். வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த போது அந்த மாகாண சபையை எதிர்த்தவர்கள் இன்று வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும் என்று கோஷம் போட்டுக் கொண்டு பாசாங்கு அரசியல் செய்கிறார்கள்.

ஒருங்கிணைந்திருந்த வடக்கு-கிழக்கு மாகாண ஆட்சியை தனித்தனி மாகாணங்களாக பிரித்தது சிங்கள இனவாதிகளே. என்றாலும். மீண்டும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரே மாகாண ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்காக பத்திரிகை அறிக்கைகளையும் மேடைப் பேச்சுகளையும் தவிர வேறு எந்தவொரு உருப்படியான வேலையையும் சம்பந்தரோ அல்லது அவர் தலைமையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள எவருமோ இது வரை செய்தது கிடையாது. மாறாக. வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றி தமிழ் மக்கள் மத்தியில் பேசிப் பேசி தமிழர்களிடம் தமது வாக்கு வங்கி அரசியலை செய்வதிலேயே அவர்கள் தமது வல்லமையைக் காட்டுகிறார்கள். அதேவேளை. இப்போதும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைய விடமாட்டோம் என்று உறுதியாக பிரகடனம் செய்யும் ஆட்சியாளர்களுடன்தான் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

2000 ஆம் ஆண்டு கைக்கு எட்டிய சந்திரிகா அவர்களின் அரசியற் தீர்வை தமிழர்களின் வாய்க்கு எட்டாதபடி செய்த சம்பந்தரும் அவர் தலைமையிலான கூட்டமைப்பினரும் சந்திரிகா அவர்கள் முன்வைத்த அரசியல் தீர்வே "நல்லது". "சிறந்தது". "உயர்வானது" என இப்போது 16 ஆண்டுகளின் பின்னர் முணுமுணுக்கின்றனர். ஆனால். இவர்கள் முண்டு கொடுத்து நிற்கும் ஆட்சியாளர்களோ வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது என திட்டவட்டமாகவே கூறுகின்றனர். பாலுக்கும் காவலன் பூனைக்கும் நண்பன் என உள்ள சம்பந்தன் கூட்டமைப்பினர் கடைசியில் தமிழர்களின் காதில் பூச் சுத்துவார்கள் என்பது மட்டும் உண்மை.

தமிழர்களின் அரசியல் நிலையைப் பார்க்கின்ற போது "கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்". "காலம் கடந்த பின் சுடலை ஞானம்" என்கின்ற பழந்தமிழர் சொற்றொடர்களே நினைவுக்கு வருகின்றன. கிடைக்கக் கூடியவற்றை கிடைக்கின்ற காலத்திலேயே கைப்பற்றிக்கொண்டு அதன் படிகளில் ஏறி முன்னேறுகின்ற சிந்தனை இன்றைக்காயினும் தமிழர்களுக்குத் தேவையாக உள்ளது. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது இனியாவது தமிழர்களின் வாழ்வில் வழிகாட்டியாக அமைய வேண்டும். தமிழர்களை இனிக்கப் பேசி ஏமாற்றும் அயோக்கியர்களை தயவு தாட்சண்யமின்றி புறந்தள்ளி. கசப்பு மருந்து ஊட்டினாலும் அதனை ஆரோக்கியத்துக்காகவே செய்யும் உண்மையானவர்களை எப்போது தமிழர்கள் தமது வழிகாட்டிகள் என தெரிவு செய்கிறார்களோ அந்த நாளிலிருந்தே தமிழர்களுக்கு இனிய நாள் தொடங்கும். அதுவரை இருண்ட காலமே.

# எத்தனை காலம்தான் சம்பந்தர் கூட்டாளிகளின் புலுடா அரசியலுக்கு தமிழர்கள் ஏமாறுவரோ!

புதிய அரசியல் அமைப்பில் தமிழர்களுக்கு உரிய தீர்வுகள் தரப்படவில்லை எனில் எதிர்வரும் வாக்கெடுப்புகளில் தமிழர்கள் அதனை எதிர்ப்பார்கள் என்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு மனு கொடுத்துள்ளதாக தமிழ் பத்திரிகைகள் சில கொட்டை எழுத்தில் நீளமாக செய்தி வெளியிட்டுள்ளன. இது பற்றி திருகோணமலையில் உள்ள பிரமுகர்கள் சிலரிடம் வினாவியபோது அவர்களிடம் குழப்பமான சிந்தனைகளே காணப்படுகின்றன.

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த சமஷ்டி முறையிலான அதி உச்ச அதிகாரப் பகிர்வே தமிழ் மக்களின் உறுதியான அபிலாசை" என்றும் "அதனை நிறைவேற்றாத - உள்ளடக்காத எந்தவொரு அரசியல் தீர்வையும் தமிழ் மக்கள் எதிர்ப்பார்கள்" என்றும் தமிழ் மக்களின் அரசியல் நலன்களைப் பேணாத அரசியல் தீர்வை முன்வைத்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால். அப்போது தமிழர்கள் அதனை நிராகரிப்பார்கள் என்றும் அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாக தெரிகிறது.

இந்த பொது அமைப்புகளில் பெரும்பாலானவை கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும். கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலின் போதும் இரா. சம்மந்தன் அவர்களுக்கும் அவரது தலைமையிலான கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும்படியே தமிழ் மக்கள் மத்தியில் தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டன. அவ்வாறே தமிழ் மக்களும் வாக்களித்தனர்.

வடக்கு கிழக்கு இணைப்பு அல்லாத ஒற்றையாட்சியைக் கொண்ட அரசமைப்புக்குள்ளேயே மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பகிரப்பட்டு அது சர்வசன வாக்கெடுப்புக்காக விடப்படுகின்ற பட்சத்தில் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களிற் பெரும்பாலானவர்களை அதற்கெதிராக வாக்களிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும். அதற்கு முண்டு கொடுத்து ஆதரித்து வரும் பொது அமைப்புக்களும் கோரினால் தமிழர்களிற் பெரும்பான்மையினர் அவ்வாறே செய்வர் என்பது தெரிந்ததே. ஆயினும். அவ்வாறானதொரு சர்வசன வாக்கெடுப்புக்கு ஆதரவாக பெரும்பான்மையான சிங்கள மக்களும். பெரும்பான்மையான முஸ்லீம் மக்களும் வாக்களித்து வெற்றி பெறச் செய்வர்கள் என்பதுவும் தெரிந்த ஒன்றே. அவ்வாறான வாக்கெடுப்பில் அனைத்து இலங்கைத் தமிழ் வாக்காளர்களும் ஒருமுகமாக எதிர்த்து வாக்களித்தாலும் அவ்வாறான சர்வசன வாக்கெடுப்பு வெற்றி பெறும் என்பதுவும் புரிந்து கொள்ளப்படக் கூடிய சாதாரண கணக்கே.

அவ்வாறானதொரு நிலையில் வடக்கு. கிழக்கு மாகாணங்கள் இணையாமலும் ஒற்றையாட்சி முறையையே கொண்டதாகவும் உள்ள அரசியல் அமைப்பே ஜனநாயக ரீதியாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக முடிவு செய்யப்படும்.

2016 ஆம் ஆண்டுக்குள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்ததாகவும். ஒற்றையாட்சி முறையை நீக்கிய வகையிலும் அதிகாரப்பகிர்வுகள் கொண்ட அரசியல் தீர்வை பெற்றுத் தரப் போவதாக உறுதி கூறியே இரா. சம்பந்தரும் அவரது தலைமையிலான தமிழ் கூட்டமைப்பினரும் தமிழர்களிடம் வாக்குகள் பெற்றனர். இப்போது தமிழர்கள் மத்தியிலுள்ள பொது அமைப்புகளென்ன! தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் கூட. "வடக்கு- கிழக்கு இணையாத மாகாண சபையை ஏற்க மாட்டோம்! அங்கீகரிக்க மாட்டோம்! அனுமதிக்க மாட்டோம்!" என்றே முழங்குகிறார்கள். அவர்களின் பத்திரிகை ஊது குழல்களும். விக்கினேஸ்வரன் ஐயா தலைமையிலான தமிழர் பேரவையினரும். தம்மைப் பொது அமைப்புகள் எனக் கூறுவோரும் "வடக்கு-கிழக்கு இணையாத. ஒற்றையாட்சிக்கு உட்பட்டதான அரசியற் தீர்வை தமிழ்த் தலைவர்கள் ஏற்கக் கூடாது! அங்கீகரிக்கக் கூடாது! தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்!" என்று அடிக்கடி கூறி வருகின்றனர்.

இன்று தென்னிலங்கையினதும். முஸ்லிம் தலைவர்களினதும் நிலைப்பாடுகளைப் பார்க்கையில். புதிய அரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வருமா என்பதே கேள்விக் குறியாக உள்ளது. அது ஒரு புறமிருக்க. புதிய அரசியல் யாப்பு வருவதாக இருந்தாற் கூட வடக்கும். கிழக்கும் இணைக்கப்பட மாட்டாது! ஒற்றையாட்சி முறையில் எந்த மாற்றமும் இருக்க மாட்டாது! என்பது தெளிவாகவே தெரிகின்றது.

வடக்கு கிழக்கு இணையாத. ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளே தற்போது அமைந்திருக்கும் மாகாண சபைகளின் பதவிகளிற்தான் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகாரர்கள் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். புதிய அரசியல் யாப்பில் வடக்கு கிழக்கு இணைவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதையும் ஒற்றையாட்சி முறையில் மாற்றம் எதுவும் ஏற்படப் போவது இல்லையெனவும் சம்பந்தரும் சுமந்திரனும் ஏற்கனவே கோடு காட்டி விட்டார்கள்.

வடக்கு கிழக்கு இணைப்பு மற்றும் ஒற்றையாட்சி தொடர்பான தமது அரசியல் நிலைப்பாடுகளில் நாளுக்கு நாள் முரண்பாடான கருத்துக்களையே சம்பந்தர் மற்றும் சுமந்திரன் உட்பட தமிழ் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வெளியிட்டு வருகிறார்கள். மக்ளுக்கு நேர்மையாக உண்மையைச் சொல்லும் திராணியற்றவர்களாக தமிழ்க் கூட்டமைப்பினர் இருக்கிறார்கள் என்பது வெளிப்படையான ஒன்றே!.

இப்போதுள்ள நிலைமைகளைப் பார்க்கிறபோது புதிய அரசியலமைப்பை இப்போது ஆட்சியினர் உருவாக்கினாலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாததாகவும். ஒற்றையாட்சி முறைக்கு உட்பட்டதாகவும் உள்ள மாகாண சபைகளே தொடரப் போகின்றன. அதனை அனுமதிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் தமிழர் கூட்டமைப்புக்கோ அல்லது அதனை ஆதரிக்கும் அமைப்புகளுக்கோ இருக்கப் போவதில்லை. தமிழர் கூட்டமைப்பினரும். அதன் ஆதரவு அமைப்புகளும் அவ்வாறான மாகாண சபைகளை அங்கீகரிக்க மாட்டார்கள் என்பதற்கு சட்டரீதியாக எந்தவலுவும் கிடையாது. 13வது திருத்த அரசியல் யாப்பின் மூலமாக அமைந்த மாகாண சபைகளை 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த தமிழ்க் கூட்டமைப்பினரும் அவர்களுக்கு ஆதரவான அமைப்புகளும் அங்கீகரிக்கவில்லைதான். அதனால் மாகாண சபைகள் இல்லாமற் போகவில்லை - செயற்படாமற் போகவில்லை. கடைசியாக மாகாண சபைகள் தொடர்பாக சரணடைந்தவர்கள் இந்த தமிழ்க் கூட்டமைப்பினரும் அவர்களின் ஆதரவு அமைப்புகளுமே.

வடக்கு கிழக்கு இணையாத. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாகாண சபைகளே தொடருமாக இருந்தால் அதில் பதவிகளைப் பெறுவதற்காக தமிழ்க் கூட்டமைப்பினர் மீண்டும் தேர்தல்களில் பங்கு பற்றினால் இந்த தமிழ் பொது அமைப்புகள் சம்பந்தரையும் அவரது தலைமையிலான தமிழ் கூட்டமைப்பினரையும் நிராகரிப்பார்களா? எதிர்ப்பார்களா? என்று அவர்களின் மனுவில் தெரிவிக்கவில்லை. அவ்வாறன அரச அமைப்பை கொண்டதாகவே மாகாணசபைகள் மீண்டும் வந்தால் அந்த மாகாணசபைகளில் தமிழ் கூட்டமைப்புக்காரர்களோ அல்லது சைக்கிள் கட்சிக்காரர்களோ பங்கு பற்றக் கூடாது என இந்த குறிப்பிட்ட பொது அமைப்புகள் தமிழ் மக்களை அணி திரட்டி தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடத்துவார்களா? என்பதற்கும் பதில் தெளிவாகவில்லை.

வடக்கு கிழக்கு இணையாத சமஷ்டி அல்லாத எந்தத் தீர்வினையும் ஏற்கமாட்டோம் -அனுமதிக்கமாட்டோம்-எதிர்போம்-நிராகரிப்போம் என்று தேர்தல் இல்லாத காலங்களில் கூறுவதும் பின்னர் அந்த மாகாணசபைகளுக்கும். தமிழர்களின் அபிலாசைகளை அங்கீகரிக்காத பாராளுமன்றத்திற்கும் தேர்தல்கள் வரும் பொழுது "சர்வதேசம் காத்திருக்கிறது". "ஆணையிடுங்கள்". "ஒற்றுமையாக வாக்களியுங்கள்" என்று தமிழர்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று பதவிகளில் உட்காந்து சுகபோகங்களையும் சலுகைகளையும் அனுபவிப்பதுதானே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் இது காலவரையான வரலாறு. அவர்களுக்கு தொண்டு செய்து வருபவர்கள்தானே இந்த பொது அமைப்புகள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமல்ல அவர்களுக்கு காவடி எடுத்து அவர்களை மக்கள் மத்தியில் பாதுகாத்து வருகின்ற இந்த பொது அமைப்புகள் எதிர்காலத்திலாவது இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்துள்ள புலுடா அரசியலிருந்து தம்மை மாற்றிக் கொள்வார்களா? என்பது அறிவு பூர்வமான தமிழர்களின் கேள்வியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை ஆளாக்கி தனி அடையாளத்தை தந்த சமூகத்திற்காக முடிந்த கடமைகளை தொடர்வேன்

தினகரன் பத்திரிகைக்காக திருமதி வாசுகி சிவகுமாரின் கேள்விகளுக்கு வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் அளித்த பதில்கள்



*கேள்வி 1- தமிழீழத்தினைத் தவிர வேறெதனையும் தீர்வாக ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனப் போராடியவர்கள். நாங்கள்! போராட்டமென்பது இனிவரும் காலங்களில் சாத்தியமில்லை எனும் நிலையில். புதிய நல்லிணக்க அரசின் அரசியலமைப்பு உருவாக்கம் இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றுக்கு வழிவகுக்கும் என வழங்கப்பட்ட நம்பிக்கைகளும் வாக்குறுதிகளும் தற்போது பொய்த்து விடும் போலுள்ளதே?*

பதில்:- 1987ம் ஆண்டு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் உருவான பின்னரும் தமிழீழத்தினைத் தவிர வேறெந்தவொரு தீர்வையும் ஏற்க மறுத்தவர்கள் புலிகள் மட்டுமே. தமிழர்கள் மத்தியில் இருந்த ஏனைய கட்சிகள் மற்றும் அரசியல் இயக்கங்களில் எதுவும் அனைத்தும் அவ்வாறானதொரு பிடிவாதமான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. புலிகளின் அழிவுக்குப் பின்னர் சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாங்கள் "தமிழீழம்" என்ற தீர்வைக் கோரவில்லை என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்கள். எனவே இன்றைய நிலையில் "தமிழீழம்" என்பது எந்தத் தமிழ்த் தலைமைகளாலும் கோரப்படாத - இறந்த கால கோரிக்கையே.

வடக்கு - கிழக்கு இணைப்பு மற்றும் சமஷ்டி அமைப்பு என்பதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது தேர்தல் வெற்றிக்காக தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியே தவிர. இலங்கையின் அரசாங்கத்தினாலோ அல்லது தேசிய அளவிலான எந்தவொரு கட்சியினதும் தலைமையினாலோ வழங்கப்பட்ட வாக்குறுதி அல்ல. ஜனாதிபதி சிறிசேனாவிடமிருந்தோ அல்லது பிரதமர் ரணிலிடமிருந்தோ தமிழ்க் கூட்டமைப்பினர் அவ்வாறாதொரு வாக்குறுதியை எந்தச் சந்தர்ப்பத்திலாயினும் பெற்றதாக இதுவரை அவர்கள் எந்த வேளையிலும் கூறவில்லை.

தமிழர்கள் இலங்கையின் அகப்புற யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல். தமது கற்பனை அரசியற் கனவுகளிலேயே இருந்தால் அவை பொய்களாக கலைந்து போவது தவிர்க்க முடியாததே.

*கேள்வி 2:- தமிழர்களால் இலகுவில் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டு ஓரம் கட்டப்படும் ஆபத்துள்ளதால். சமஷ்டியைத் தவிர வேறெந்த தீர்வினையும் நோக்கி தமிழ்த் தலைவர்கள் அவர்களை வழிநடத்தக்கூடிய சாத்தியக்கூறு உள்ளதா?*

பதில்:- மக்களின் பொதுநலன்களுக்கான தேவைகளைச் சாத்தியமாக்குவதற்குரிய நடைமுறைகளை செயற்படுத்துவதோடு. அவற்றை மக்களுக்குப் புரியும்படி செய்து மக்களையும் இணைத்தபடி வழிநடத்திச் செல்வதே மக்களின் தலைமையாகும். ஆனால் இங்கு தமிழர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தம்மை நம்பும் சமூகத்துக்கான தலைவர்களாக செயற்படவில்லை. தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி? பெற்ற பதவிகளை தக்க வைப்பது எப்படி? என்பதில்லையே அக்கறையாக உள்ளனர்.

தமது தேர்தல் வெற்றிக்காக மற்றவர்களைத் துரோகி என பட்டம் கட்டும் கலாச்சாத்தை வளர்த்தவர்கள் தமிழரசு. கூட்டமைப்புக்காரர்களே. இப்போது அவர்கள் வளர்த்த பூதமே அவர்களை காலவர்த்தமான யதார்த்தங்களுக்குப் பொருத்தமான அரசியற் தீர்வை நோக்கி செயற்பட விடாமல் கட்டை போடுகிறது.

தமிழ் மக்களிற் பெரும்பான்மையினர் தங்களின் பிரதிநிதிகளாக யாரை? ஏப்படிப்பட்டவர்களை? தெரிவு செய்கிறார்கள் என்பதைப் பொறுத்தே தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடிய யதார்த்தமான தீர்வை நோக்கிய அரசியற் பயணம் தமிழர்கள் மத்தியில் சாத்தியமாகும்.

*கேள்வி 3:- வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வென்பது எவ்வாறு சாத்தியமாகும்?*

பதில்:- வடக்கு-கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்களின் தலைவர்கள் பகிரங்கமாக ஏற்காத வரையில் அது சாத்திய மில்லை என்பது இங்கு கேட்கப்பட்டுள்ள கேள்விலேயே தொக்கி நிற்கிறது. வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது ஒரு தனி விடயம். சமஷ்டி என்பது மற்றொரு தனி விடயமாகும். 1987ம் ஆண்டு இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் முஸ்லிம் மக்களின் தலைமைகள் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கவில்லை. இன்றைய நிலைமை அவ்வாறில்லை. வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வு வேண்டுமென்றால் பெரும்பான்மையான தமிழர்களின் வாக்குகளைப் பெற்ற தமிழரசுக் கூட்டமைப்பின் தலைமையும். பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பிரதிபலிக்கும் அரசியற் தலைமைகளும் ஒரே குரலில் அதனைக் கோர வேண்டும். அவ்வாறான நிலைமை இன்று இங்கு இல்லை என்பதே யதார்த்தம். வடக்கு-கிழக்கு இணையாத தீர்வு வேண்டாம் என்றால். அவ்வாறு கிடைக்காதவரை தமிழர்களுக்கு மாகாண சபையே வேண்டாம் என்பதே அர்த்தமாகும். வேண்டாத மாகாண சபையில் அவ்வாறானவர்கள் பதவிகளை மட்டும் பிடித்து வைத்துக் கொள்வது தமிழர் களுக்கே பாதகமாக அமையும்.

*கேள்வி 4:- இணைந்த வடக்கு கிழக்கின் முதல்வராக இருந்தவர் நீங்கள். தற்போதைய வடக்கு மாகாணசபையின் வினைத்திறனின்மை பற்றி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?*

பதில்:- வடக்கு மாகாண சபையிலுள்ள அரசியற் பிரதிநிதிகளோ அல்லது வடக்கு மாகாண ஆட்சி அமைப்பில் உள்ள அரச நிர்வாகிகளோ வினைத்திறனற்றவர்கள் என நான் கருதவில்லை. அரச நிர்வாக அமைப்பு என்பது ஓர் இயந்திரக் கட்டமைப்பே. அதிலுள்ள நிர்வாகிகள் எவ்வகையாக அதற்கான ஆட்சியில் உள்ள அரசியற் தலைமையால் வழி நடத்தப்படுகிறார்கள் - நெறிப்படுத்தப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அதன் வினைத்திறன் அமையும். வடக்கு மாகாண சபை 300க்கு மேற்பட்ட தீர்மானங்களை விவாதித்திருக்கிறது - நிறைவேற்றியிருக்கிறது. இந்த 3 ஆண்டு காலகட்டத்தில் 300க்கு மேற்பட்ட நியதிச் சட்டங்களை ஆக்கியிருக்கக்கூடிய வாய்ப்பும் வளங்களும் ஆற்றல்களும் வடக்கு மாகாண சபையிடம் இருப்பதையே இது காட்டுகிறது.

பயன்தரும் காரியங்களை ஆற்றும் வினைத் திறன் கொண்ட ஓர் அரசியற் தலைமைக்கு கெட்டித்தனமாக ஊழல் மோசடிகளைச் செய்யும் வினைத்திறன் இல்லாமல் இருக்கலாம். ஆனால் கெட்டித் தனமாக ஊழல் மோசடிகளை மேற்கொள்ளக் கூடிய ஓர் ஆட்சித் தலைமைக்கு நிச்சயமாக பயன் தரும் காரியங்களை ஆற்றும் வினைத்திறன் இருக்கவே செய்யும். வடக்கு மாகாண சபையின்

> தமது தேர்தல் வெற்றிக்காக மற்றவர்களைத் துரோகி என பட்டம் கட்டும் கலாச்சாத்தை வளர்த்தவர்கள் தமிழரசு. கூட்டமைப்புக்காரர்களே. இப்போது அவர்கள் வளர்த்த பூதமே அவர்களை காலவர்த்தமான யதார்த்தங்களுக்குப் பொருத்தமான அரசியற் தீர்வை நோக்கி செயற்பட விடாமல் கட்டை போடுகிறது.

தலைமைகள் மக்களுக்கான காரியங்கள் எதனையுமே ஆற்றாமல் பெரும் ஊழல் மோசடிகளை வினைத் திறனுடன் செய்திருக்கிறார்கள் என்பது ஊரறிந்த விடயம். மத்திய அரசிடம் இருந்து தமக்கு தனிப்பட்டரீதியில கிடைக்கக் கூடிய எல்லா வளங்களையும். சலுகைகளையும். சுக போகங்களையும் பெற்றுக் கொள்வதில் வடக்கு மாகாண சபைக்காரர்கள் மிகுந்த வினைத்திறனுடன் தொடர்ந்து செயற்படுகிறார்கள் தானே! வடக்கு மாகாண சபையினால் மக்களுக்கான உருப்படியான கர்ரியம் எதுவும் ஆற்றப்படவில்லையென்றால் அது அவர்களின் உறுதியான அரசியற் கொள்கையின் காரணமான விளைவே. அதாவது. மாகாண சபைகள் தங்களுக்கு தனிப்பட்டரீதியில் பய்னுடையவையாக இருப்பினும் தமிழ் மக்களுக்கு அதனால் பயன் கிடைக்காது - பயன் கிடைத்து விடக் கூடாது என்பதை நிரூபிக்கும் கொள்கையை அவர்கள் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

*கேள்வி 5:- 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்திலுள்ள குறைபாடுதான் அதன் வினைத்திறனின்மைக்கு காரணமெனில் எவ்வாறு அது நிவர்த்திக்கப்படலாம் ?*

பதில்:- 13வது அரசியல் யாப்புத் திருத்த சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் குறைவாகவே வழங்கப்பட்டிருக்கின்றன என்பது ஒரு விமர்சனம். அதைவிட. அதில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைபாடான முறையில் வழங்கப்பட்டுள்ளன என்பதே பிரதானமான விடயமாகும். மேலும். வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறைவாக வழங்கப்பட்டிருப்பினும். வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு. மாகாண சபைகளை வினைத்திறனுடன் மக்களுக்குப் பயன்படும் விதமாக செயற்படுத்துவது மாகாண சபைகளின் அரசியற் தலைமைகளிலும் தங்கியிருக்கின்றது.

இப்போதுள்ள ஆட்சியினரினால் புதிய அரசியல் யாப்புக்கான முன்னெடுப்பு முயற்சிகள் தொடரப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் இப்போது நடைமுறையிலுள்ள 13வது அரசியல் யாப்பு திருத்த சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுமா என்ற கேள்வியுள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளிடமும் அவ்வாறானதொரு கோரிக்கையோ அக்கறையோ இப்போது இல்லை.

*கேள்வி 6:- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது சில காலங்களுக்கு முன்னர் பெயர் மாற்றம் பெற்றது. அதன் காரணம் என்ன ?*

பதில்:- காலத்தால் ஏற்பட்ட அகப்புற சூழல் மாற்றங்களும் மற்றும் மக்களின் அடிப்படையான அரசியல். பொருளாதார. சமூக அவசியங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுமே "பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி"யின் பெயர் "தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி"யாக மாறுவதற்கு உந்தியுள்ளன.

*கேள்வி 7:- தமிழ் அரசியல் பரப்பில் நீண்ட. ஆழ்ந்த அனுபவம் கொண்டவர் நீங்கள். மீண்டும் தீவிர அரசியலில் இறங்குவது குறித்து சிந்திக்காதது ஏன்?*

பதில்:- தமிழ் அரசியல் பரப்பில் நீண்ட. ஆழ்ந்த அனுபவம் கொண்டவர்கள் பலர் இன்றைய தேர்தல் அரசியல் பரப்பில் ஏற்கனவே சக்தி மிக்கவர்களாக உள்ளனர். இந்த நிலையில் நான் அரசியலில் ஈடுபட வேண்டுவதற்கு அவசியமான தேவைகள் இங்கு உள்ளனவா என்பது என்னுள் இன்னமும் விடை தெரியாதிருக்கும் கேள்வியாகும்.

ஒரு தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான போராடத்தில் ஈடுபடுவதற்கு இலட்சிய உணர்வுபூர்வமான கொள்கை நாட்டமும். அதற்காக தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றமையும் போதுமானவைகளாகும். அவ்வாறான ஓர் இயக்கத்தை வழி நடத்துவதற்கு போதிய அறிவும் அனுபவமும் பக்குவமும் அவசியம். ஆனால் இப்போது இங்குள்ள அரசியலானது தேர்தல்கள் மூலமாக பதவிகளை அடைய முயலும் அரசியலாகும். இதில் நீந்துவதற்கு அறிவு மற்றும் அனுபவங்களுக்கு மேலாக பல்வேறு அக. புற விடயங்கள் பொருந்தி வர வேண்டும். கனவுகளை அடைவதற்காக கற்பனைகளுடன் ஓடுவதை விட. எனது நிலைக்குப் பொருத்தமான நினைவுகளுடன் தொடர்ந்து நடக்கவே விரும்புகிறேன்.

ஒருவனின் சமூக முன்னேற்ற ஈடுபாட்டுக்கு தேர்தல் அரசியற் களத்தில் இறங்குவது கட்டாயமான தேவை என்றில்லை. எனது பயணத்தின் பாதையில் எதிர்பாராத திருப்பங்களும் திடீர் ஏற்ற இறக்கங்களும் எப்போதும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இனியும் அவை நிகழ்வது சாத்தியமே. இருக்கும் வளங்களையும் வாய்ப்புகளையும் கொண்டு எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களை சாதகமானவைகளாக ஆக்குவதற்கு நான் கற்ற அறிவுகளும் பெற்ற அனுபவங்களும் பயன்படுகின்றனவா என்று பார்க்கலாம். 64 வயதைத் தொடவுள்ள எனக்கு. நான் பிறந்த இந்த தேச மக்களுக்காக - என்னை ஆளாக்கி ஒரு தனி அடையாளத்தைத் தந்த இந்த சமூகத்துக்காக. ஏதாவது என்னால் உருப்படியாக ஆற்றுவதற்கு காலமும் இயற்கையும் வாய்ப்புத் தர வேண்டும். எனது கடந்த காலம் பற்றி திருப்தியாகவே உள்ளேன் - எதிர்காலத்துக்காக என்னால் முடிந்த கடமைகளை தொடருவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“2017 இன் அரசியற் சாத்தியங்கள்?” என்றொரு ஆய்வரங்கு கடந்த 08.01.2017 அன்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. புதிய ஆண்டில் நடக்கவுள்ளவை எவையாக இருக்கலாம் என்று சிந்திக்கக்கூடியதாக, 2017ன் தொடக்கத்தில் நடந்த இந்த நிகழ்வை தமிழர் சமூக ஜனநாயகக் கட்சிக்கு நெருக்கமான தரப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், உரைகளும் உரையாடலும் எந்தத் தரப்பின் அழுத்தங்களுக்கும் உட்படாமல், பொதுத்தளத்தில் நடந்தன. பல்வேறு விதமான நிலைப்பாடுகளைக் கொண்டவர்களும் பங்கேற்ற திறந்த நிலை அரங்கு இது.

ஆனால், இந்தத் தலைப்பைக் கேட்டபோது, இதை “அரசியல் சாத்திரமாக (சோதிடமாக)” எடுத்துக் கொள்வதா? “அரசியற் சாத்தியங்கள்” என்று எடுத்துக் கொள்வதா? என்று முதலில் யோசித்தேன். ஏனென்றால், தமிழ்ச் சூழலில் அரசியற் சாத்தியப்பாடுகளைப் பற்றி யோசிப்பதை விட அரசியற் சாத்திரங்களில் லயிப்பதே பெரும்பாலனவர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியுமாகும். அதிலும் இனிப்பான முடிவுகளைச் சொல்லும் சாத்திரங்கள் என்றால் அதைவிடச் சந்தோசம் அவர்களுக்கு வேறேது? இப்படி இனிப்பான சாத்திரங்களில் வெறுந்தரையிலேயே படகோட்டி, இல்லையில்லைக் கப்பலோட்டி வாழும் தமிழ்ச்சமூகத்தில் மெய்யான சாத்தியங்கள் எப்படியிருக்கும் என்ற துணிவைக் கூற முடியும்? ஏனென்றால், தமிழர்கள் அதிகமாக மனப்பால் குடிக்கும் இயல்புடையவர்களல்லவா. ஆகவே அவர்களுக்கு எப்போதும் இந்த மாதிரி இனிப்பான அரசியற் சாத்திரங்களில் மட்டுமே பிடிப்புண்டு. இருந்தாலும் இந்த அரங்கு எதையும் விஞ்ஞானபூர்வமாகப் பார்க்க வேணும். விஞ்ஞானபூர்வமாக அணுக வேணும் என்ற நோக்கில் அமைய வேணும் என்று சொல்லப்பட்டது. இதை ஏற்பாடு செய்தவர்களின் நோக்கும் அவ்வாறானதே. ஏறக்குறைய அரங்கும் எதிர்பார்க்கப்பட்டதற்கு அமைய அவ்வாறே அமைந்தது.

“2017 இன் அரசியற் சாத்தியங்கள்?” எப்படி இருக்கும் என்று தொடங்கப்பட்ட ஆய்வுரைகள், பெரும்பாலும் இன்றிருக்கின்ற அரசியற் சூழலில் நம்பிக்கையளிக்கக் கூடிய மாதிரி, நற்குறிகள் எதுவும் புலப்படவில்லை என்ற விதமாகவே முன்வைக்கப்பட்டன.



படவில்லை. எதிர்முகாமில் இருந்து சவால்களை விடுக்கும் மகிந்த ராஜபக்ஸவினால் கூட இந்த நிலைமைகளில் பெரிய மாற்றங்களை உண்டாக்கக் கூடிய சாதக நிலைமைகள் தென்படவில்லை.

இந்த நிலையில் 2017 மட்டுமல்ல அடுத்த ஆண்டுகளிலும் இந்த அரசாங்கமே தொடர்ந்தும் இருக்கக் கூடிய நிலைமைகள் உள்ளன. வெளிச்சக்திகளுக்கும் இந்த அரசாங்கம் உவப்பாகவே உள்ளது. வெளிச் சக்திகளுக்கு உவப்பான முறையிலேயே கொழும்பின் அரசியல், இராசதந்திர, பொருளாதரத் திட்டங்களும் நடவடிக்கைகளும் உள்ளன. இதில் இடையீட்டைச் செய்யக்கூடிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் கட்சிகள் கூட வேறாகச் சிந்திக்கவும் செயற்படவும் கூடிய நிலைமைகள் காணப்படவில்லை. அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்குப் பதிலாக அரசியலமைபுத்திருத்தம் மட்டுமே நிகழவுள்ளது. அதுவும் வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாத நிலையில், ஒற்றையாட்சியை வலியுறுத்துவதாகவே அமையவுள்ளது. ஏற்கனவே உள்ளதைப்போல பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பகிரங்கமாகவே தெரிவிக்கிறார்கள். சமஷ்டிக்கான பேச்சும் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், சிறிய அளவிலான மாற்றங்கள்

ஆகவே நம்முன்னே உள்ள விசயங்களில் நம்மால் சாத்தியப்படுத்தக் கூடியவையும் சாத்தியப்படுத்த வேண்டியவையும் எவை என்று அறிவதே இங்கே முக்கியம். குறிப்பாக அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான குழுக்களின் அறிக்கைகளில் ஏராளமான முக்கிய விசயங்கள் முன்வைக்கப்பட்டு உள்ளன. அவற்றின் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், அவற்றை ஊடகங்கள் கவனிக்கவில்லை. இது கவலைக்குரியது.

ஊடகங்கள் எப்போதும் அரசியல் வாதிகளின் பேச்சுகளையும் பிரகடனங்களையும் மையமாக வைத்தே செய்திகளை வெளியிடுகின்றன. ஆய்வாளர்களும் கூட இந்தப் பிரகடனங்களையும் அரசியல் அறிக்கைகளையும் மையமாக வைத்தே தங்கள் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். ஆனால், உண்மை நிலைமை என்னவென்றால், அரசியலமைப்புத் திருத்தத்தில் அல்லது மாற்றத்தில் பல முக்கியமான நல்ல அம்சங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மாகாணத்துக்குப் பொலிஸ் அதிகாரத்தைப் பரிந்துரைப்பது வரையில் அவற்றில் பல விசயங்கள் உள்ளன என்ற கலந்து கொண்டோர் சார்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு விசயமாக, வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றித் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேசி வருகிறது.

# 2017 இன் அரசியற் சாத்தியங்கள் ?

கருத்தரங்கு குறித்து சி.கருணாகரன் தேனி இணையத் தளத்தில் எழுதியதிலிருந்து



குறிப்பாக “நல்லாட்சி” அரசாங்கம் பற்றி தொடக்கத்தில் உணரப்பட்டதற்கும் இன்றைய நிலைக்கும் இடையில் பெரும் இடைவெளியும் நம்பிக்கை வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. ஆட்சி அமைக்கப்படும்போது கூறப்பட்ட உறுதியுரைகளுக்கும் பிரகடனங்களுக்கும் மாறாகவே நிகழ்ச்சிகள் அமைந்து கொண்டிருக்கின்றன. கூட்டரசாங்கம், இலங்கை அரசியல் வரலாற்றில் மாறுபட்ட அடிப்படையில் உருவாகிய அரசாங்கம், தேசிய அரசாங்கம் என்ற தன்மைகளைப் புறக்கணிக்கும் விதமாக, வழமையான முன்னைய அரசாங்கங்களைப் போலவே இந்த அரசாங்கமும் படியிறங்கிக் கொண்டிருக்கிறது. தான் வாக்குறுதியளித்த அரசியல் சாசன உருவாக்கத்திலும் கூடத் தெளிவின்மைகளும் உறுதிப்பாடின்மைகளுமே தெரிகின்றன. அல்லது சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கே அதிகமாகக் காணப்படுகிறது. அவ்வாறே நாட்டின் பொருளாதாரத்திட்டங்களிலும் எத்தகைய புதிய மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் உணர முடியவில்லை. பதிலாக இந்த அரசாங்கம் உருவாகுவதற்கு பின்தளத்தில் இயங்கிய மேற்குலகமே அதிக நன்மைகளைப் பெறுகின்ற சாத்தியங்களே தெரிகின்றன.

மேற்குலகத்தின் நுழைவைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்தியாவும் இந்தியாவின் உள் நுழைவைச் சாட்டாக வைத்துக் கொண்டு சீனாவும் இலங்கையில் செல்வாக்குச் செலுத்துகின்ற நிலைமைகளே அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே பிறத்தியாருக்கான அனுகூலங்களே அதிகமாகக் காணப்படுகிறது. சொந்த மக்களை விட வெளியாரைத்திருப்திப்படுத்தும் போக்கைக் கொண்ட நவதாராளவாத அரசாங்கமாக இந்த அரசாங்கம் அமைந்திருக்கிறது. இது மக்களுக்கு மாறான விளைவுகளையே எதிர்காலத்தில் உண்டாக்கும். இந்த நிலைமைகளைத் தடுத்து நிறுத்தக் கூடிய அரசியற் திராணிகள் வலுவாகக் காணப்

அல்லது திருத்தங்களுக்கு இடமுண்டு. அவை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவாக்கக்கூடியன வல்ல. ஆகவே, புதிய சாத்தியங்கள் என்பது குறைவான தன்மையே காணப்படுகிறது. இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஒத்துழைக்கும் நிலையே காணப்படுகிறது. இந்த ஒத்துழைப்பு எதுவரை நிகழும் என்று கேள்விகள் இருந்தாலும் நிலைமைகளைக் கூர்ந்து அவதானிக்குமிடத்தே, இந்த ஆட்சி முடியும்வரை இந்த ஒத்துழைப்பு நிகழும் என்றே தெரிகிறது. ஆனால், இது கூட்டமைப்பினுள்ளே இருக்கும் தீவிரப்போக்கினருக்கு அதிருப்தியை மேலும் கூட்டும். அப்படி அதிருப்தி சூடாகும் போது, அவர்கள் விக்கினேஸ்வரனுடன் இணைந்து கொண்டு புதிய அலையொன்றை அல்லது ஏற்கனவே உள்ள தமிழ் மக்கள் பேரவையை வலுப்படுத்த முயலக்கூடும். அதற்கான சாத்தியங்களும் உண்டு என்ற அடிப்படையில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

உரைகளை அரசியல் ஆய்வாளர் யதீந்திரா, இடதுசாரியச் சிந்தனையாளர் ஜோர்ஜ் மற்றும் இந்தப் பத்தியாளர் ஆகியோர் நிகழ்த்தினர். இருந்தும் கலந்து கொண்டவர்கள் இந்த உரையாளர்களை நோக்கி முன்வைத்த அபிப்பிராயங்கள் வேறு விதமாக அமைந்திருந்தன.

சாத்தியங்களை அறிந்து கொள்வதற்குப் பதிலாக சாத்தியமின்மையைப் பற்றியே இங்கே பேசப்பட்டது. தமிழ்ப்பாரம்பரியம் எப்போதும் எதிர்மறைச் சிந்தனை வசப்பட்டது. எதையும் எதிர்மறையாகப் பார்க்கும் இயல்புடையது. அதை மீளவும் இங்கே ஆராயவோ நோக்கவோ வேண்டியதில்லை. எதையும் அவநம்பிக்கையாகப் பார்ப்பதை விட, நம் முன்னே உள்ள யதார்த்தத்தை உணர்ந்து, அதற்கமையச் சிந்திக்கும் அவசியம் இன்றுள்ளது. அதைப்பற்றிச் சிந்திப்பதற்காகவே இங்கே நாம் வந்திருக்கிறோம். அவ்வாறான எதிர்பார்ப்புகளே இங்கே உள்ளது.

ஆனால், இன்றைய நிலையில் வடக்குக் கிழக்கு இணைப்புச் சாத்தியமானதா? என்று அது சிந்தித்திருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் முரண்பாடுகளும் இடைவெளிகளும் நிறைந்திருக்கும் நிலையில் வடக்குக் கிழக்கு இணைப்பைச் சாத்தியப்படுத்துவதற்கு வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்களச் சமூகங்களுக்கிடையே உரையாடல்கள் நடைபெற வேண்டும். அந்த உரையாடல்கள் எங்கும் தொடங்கவேயில்லை. வடக்குக் கிழக்கு இணைப்பின் நன்மைகள் என்ன? இணைப்பின்மையினால் ஏற்படும் தீமைகள் என்ன என்ற பொது விளக்கத்தைக் கூட அது இன்னமும் வெளிப்படுத்தவில்லை. ஆனால், வெறும் அரசியல் வாய்பாடாக மட்டுமே இந்தச் சொல் உச்சரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறே ஏராளமான விசயங்கள் எத்தகைய உழைப்பும் வேலைத்திட்டமில்லாமலும் கால நீட்சியாகப் பேசப்பட்டு வருகின்றன எனவும் கூறப்பட்டது.

இவ்வாறு பல விசயங்கள் இந்த அரங்கில் விவாதிக்கப்பட்டன. அத்துடன், இப்போதுள்ள நிலைமையில் வடக்குக் கிழக்கு இணைப்புக்கான சாத்தியப்பாடுகள் மங்கலாகவே உள்ளன. ஆனால், மாகாணசபைக்கான அதிகாரங்களைக் கூட்டக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. சட்டவலுவாக்கத்திலும் நீதித்துறையிலும் வலுவுட்டல்களுக்கிடமுண்டு. நிதியைக் கையாள்வதற்கான அதிகாரமும் கிடைப்பதற்கான சாத்தியங்களை ஏற்படுத்தலாம். இதற்கெல்லாம் ஒருங்கிணைந்த அடிப்படையில் ஏனைய அரசியல் தரப்புகளுடன் உரையாடல்களைச் செய்தால் பல சாத்தியங்களை உண்டாக்கலாம். நமது கற்பனை விட யதார்த்தத்தை உணர்ந்து கொள்வதே அவசியமாகும் என்ற கருத்தைப் பார்வையாளர்கள் முன்வைத்தது குறிப்பிடத்தக்கது. மக்கள் பெரும்பாலும் யதார்த்தத்தை உணர்ந்திருப்பதன் அடையாளம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடுமி பிடி சண்டையில் கூட்டமைப்பினர் கோமாளியாகும் பண்டார வன்னியன்





சிவமோகன்



ரவிகரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிவமோகனுக்கான அரச வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மல்லாவியில் பண்டார வன்னியன் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அது தொடர்பான ஒரு அவசரப் பிரேரணை வடக்கு மாகாணசபையில் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்பிரேரனை மீது உரை யாற்றிய முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், திறந்து வைக்கப்பட்டுள்ள சிலையானது பண்டார வன்னியனை இழிவு படுத்துவதாக உள்ளதெனவும், மாகாண சபை வரவு செலவுத் திட்ட நிதியி லிருந்து தனது திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் பண்டாரவன்னியன் சிலையை தான் அமைக்க இருந்தாகவும், அதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் விச மத்தனமான செயற்பாடாக பண்டார வன்னியனின் சிலையை அமைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அந்தச் சிலை தொடர்பில் தனக்கு பல முறைப்பாட்டு கடிதங் கள் வந்ததாகவும், அதில் ஒன்றில் கடிதம் எழுதியவர் பண்டாரவன்னியன் சிலையை பார்த்த போது அந்த மன்னன் போலியோ நோய் வாய்ப்பட்டு இறந்தாரா? என்று கேட்டுள்ள தாகவும் கூறிய திரு. ரவிகரன், தமிழ் மன்னனின் வீரம் பொருந்திய உடலை சிவமோகன் கொச்சப்படுத்தியுள்ளார் என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபையில் தொடர்ந்து உரையாற்றிய திரு.சிவாஜிலிங்கம் அவர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டாரவன்னியன் சிலையை வைப்பதற்கு பதிலாக 23ஆம் புலிகேசியின் சிலையை வைத்துள்ளனர் என்று தமது கூட்டணிக் கட்சிக்காரர்களையே கிண்டல் அடித்துள்ளார்.

இது பற்றி தமது கருத்துகளை பத்திரிகைகளுக்கு வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வடக்கு மாகாண சபையை, வன்னியில் இருந்து தெரிவான ஒரு சில உறுப்பினர் கள் தமது பிரச்சார மையமாக பயன்படுத்துகின்றனர் என குற்றம் சாட்டுகின்றார். அவர் மேலும் கூறுகையில், இத்த கையோர் அர்த்தமற்ற பொருத்தமற்ற கருத்துகளை வெளியிட்டு ஊடகங்களில் இடம் பிடிக்க முயல்கின்றனர் எனவும், அதன் மூலம் தமது வங்குரோத்து அரசியலை நடத்த முனைகின்றனர் எனவும் தமது கூட்டமைப்பு சகாக் களை கடுமையாகச் சாடியுள்ளார்.

திரு. சிவமோகன் அவர்கள் தனது அறிக்கையில், அண் மையில் காந்தி சிலை முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட போது முல்லைத்தீவுக்கு காந்தி என்ன செய்தார் என தம்மை ஒருவர் கேள்வி கேட்டதாகவும் கூறியுள்ளார். பண்டார வன்னி யன் சிலை பற்றிக் குறிப்பிடும் திரு. சிவமோகன், பண்டார வன்னியனுக்கு மல்லாவி நகரமே ஒன்று சேர்ந்து கௌரவ மளித்தது. ஏழரையடி உயரத்திற்கு சிலை அமைத்ததாகவும் அதனை தமது தந்திரம் மூலம் சிறுப்பித்து சிலர் தமது வங்குறோத்து அரசியலை செய்ய முற்பட்டுள்தாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாணசபையிலுள்ள தமது கூட்டமைப்பு சகாக் களையே குறிப்பிடும் அவர், அவர்கள் வவுனியாவில் இராணு வத்தளபதி கொப்பேகடுவவின் சிலையை அமைப்பதற்கு பண உதவி செய்தவர்கள் என்றும் முல்லைத்தீவில் இராணு வத்தினர் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள வீதிகளின் பெயர்களை மாற்றியமைப்பதற்கு முயற்சி எடுக்காதவர்கள் என்றும், அவா கள் வடக்கு மாகாண சபையில் கூச்சமில்லாமல் பொய் களையே கூறிவருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பும் அதன் வடக்கு மாகாணசபையும் எவ்வாறு செயற்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். தமிழ்க் கூட்டமைப்புக்காரர்கள் “பொய்யர்கள்”, “வங்கு ரோத்து அரசியல் செய்பவர்கள்”, “மாகாண சபையை தமது சுயபிரபலங்களுக்கான பிரசார மையமாக பயன்படுத்து பவர்கள்”, “அரச படைகளின் விசுவாசிகள்” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களே மக்களுக்குப் பகிரங்க மாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பின்னரும் இவர்கள் தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் பிரதிநிதிகள் என இவர்களை தமிழர்கள் நம்பினால் அது தமிழர்களின் தலைவிதி!

# கிடைத்துள்ள ஏணியை நேராக்கி ஏறினாலே மேல்நோக்கி முன்னேறுவது சாத்தியமாகும்

நூற்றாண்டுக்கு மேலாக சமூக பொருளாதார அபி விருத்தி என்பதை விட பிரதானமாக இனசமூக மோதல்கள் முரண்பாடுகளினூடாகவே இலங்கை பயணம் செய்திருக்கிறது. அதற்குச் சமாந்தரமாக ஊடகங்களிலும் அதுவே பிரதான செய்திகளாக இடம் பிடித்து வந்திருக்கின்றன.

இலங்கை சுதந்திரம் பெற்றதற்கு பின்னரான பிந்திய 30 ஆண்டுகளில் எவ்வளவோ பேரழிவுகளைச் சந்தித்த பின்னரும், அதன் விளைவாக அமிவுகளை, அவலங் களை இலங்கையின் சகல இன சமூகங்களும் அனு பவித்து வந்திருக்கின்ற போதிலும் இன்றும் பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கான - சமூகங்களை சமத்து வமாக ஒன்றிணைப்பதற்கான செய்ற்பாடுகள் மந்த கதியிலேயே நிகழ்கின்றன.

மீண்டும் மீண்டும் நாட்டை இனவாத சகதியில் மூழ் கடிப்பதன் மூலம் தேசிய சமூகங்களுக்கிடையே வளரும் வெறுப்புகளும், குரோதங்களுமே அரசியல் ஆதிக்க சக்திகளின் பிரதான ஆயுதங்களாக இன்றள வில் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த இனமுரண்பாட்டு மோதல்களின் கதைகளுட னேயே காலம் கழிகிறது. சமூக பொருளதார அபி விருத்தி தொடர்பான அக்கறைகள் இங்கு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

புதிய அரசியல் யாப்பு சீர்திருத்த முயற்சிகள் நாட்டைப் பிரிக்கும் அபாயம் என்பதாக பொது எதிரணியினரால் சித்தரிக்கப்படுகிறது. அரசியல் விவகாரங்களில் பிக்கு கள் மற்றும் இராணுவவாதிகளின் தலையீடுகள் அதி கரித்திருக்கின்றன. தமிழர் தரப்பிலோ அதிகாரப் பகிர்வுக்கான ஆக்கபூர்வமாக பங்களிப்பதை விட நாட கபாணி நிராகரிப்புவாதமே தூக்கலாக இருக்கிறது.

நீண்டயுத்தம் ஒன்றின் பெரும் அழிவுகள், அவலங்க ளின் பின்னும் கூட இலங்கையின் அரசியல் நேர்த் தியானதாக முன்னேறுவதற்கான சாத்தியங்களைக் காண முடியவில்லை. கரடுமுரடானதானதாகவே அது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இழப்புக்களை ஈடுசெய்யமுடியாத அளவுக்கு அழிவு களை சந்தித்தவர்களுக்கு நீதி வேண்டும்: அவர்களின் வாழ்வு நிமிர வேண்டும்: எதிர்காலத்தில் இத்தகைய நிலை ஏற்படக் கூடாது: சமூகங்கள் சமத்துவமாக நடத்தப்படவேண்டும்: பல்லின சமூகங்களின் நாடாக இலங்கை மிளிரவேண்டும்: சமூக பொருளாதார அபி விருத்தியின் சிகரங்களை இலங்கை தொட வேண்டும் - இந்த கனவுகள் எல்லாம் கானல் நீர் காட்சிகளா கவே இருக்கின்றன.

பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவதற் கான வழியைப் பார்க்காமல் திரும்பவும் இருண்ட காலத்தினுள் இழுத்து விடுவதற்கான முயற்சிகளை மதவாத இராணுவ வாத- மேலாதிக்க தேசியவாத - குறுந்தேசியவாத சக்திகள் முயல்கின்றன. சிறு பான்மை மத இன சமூகங்களுக்கெதிராக தீவிரவாத சக்திகள் தலைதூக்கியிருக்கின்றன. பாதுகாப்பற்ற உணர்வுகள் கொண்ட நிலைமையே சிறுபான்மை சமூகங்களிடையே தொடர்கிறது.

ஜனநாயக சமூக பொருளாதார வாக்குறுதிகளை மக் களுக்கு வழங்கியபடி 2015 ஜனவரி 8 இல் பதவிக்கு வந்த இன்றைய அரசு, கடந்த இருண்ட காலத்தில் தலையெடுத்த பாதகமான நிலைமைகளில் மாற்றங் களை ஏற்படுத்தி இலங்கையை முன்னேற்றகரமான பாதையில் வழிநடத்திச் செல்லும் என்ற பெரும் நம் பிக்கை இலங்கையின் பரந்துபட்ட மக்களிடையே காணப்பட்டது. மைத்திரி - ரணில் கூட்டாட்சியில் முதல் நூறு நாட்கள் திட்டம் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்ட போது மக்களின் நம்பிக்கை மேலும் வலுப்பட்டது.

ஆனால், 2015ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான காலகட்ட நிகழ்வுகள் அந்த நம்பிக்கை களை பலவீனப்படுத்துபவையாக தொடர்கின்றன. ஆட்சி அதிகாரத்துக்காகப் போட்டியிடும் இரு பெரும் கட்சிகளும் ஒன்றிணைந்த அரசாங்கத்தை அமைத் தமை ஒரு பெரும் வாய்ப்பாகும். இந்த வாய்ப்பு மீண்டு மொருமுறை கிடைக்க முடியாது என்பதே நிலைமை. எனவே இப்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தவற விடக்கூடாது என்பதே ஜனநாயக முற்போக்கு சக்தி களின் எதிர்பார்க்கை.

தொடர்ச்சியாக இலங்கையின் வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதும், அதிகாரப் பகிர்வினூடாக சமூகங் களை ஒன்றிணைப்பதும், சமூக பொருளாதார மறு மலர்ச்சியை எய்துவதும் அவசியமாகும். நூட்டின் இரு பக்கமும் உள்ள அதிதீவிர இனவாத சக்திகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் விபரீத அரசியல் விளை யாட்டுகளில் ஈடுபாடு காட்டினால் நாடு மீண்டும் இரு ளில் தள்ளப்படும். அது இந்த நாட்டை ஒரு முன் னேற்றகரமான தேசமாக கட்டியெழுப்புவதற்குப் பதி லாக அடுத்தடுத்து இரத்த ஆறும் ஓடும் யுத்தகளமாக வைத்திருக்கும் என்பதை பொறுப்பான அரசியற் தலைவர்கள் புரிந்து செயற்பட வேண்டும்.

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் இல 79, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் புதிய கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org